# திசை
THISAI

திசை 1 | 30-6-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 25


## பிச்சையெடுத்தல் தடை செய்யப்படும்

பிச்சையெடுத்தல் விரைவில் ஒழிக்கப்படும் என சமூகநலன் புரிக்குழுவி ராஜாங்க அமைச்சர் சமந்த கருணாரத்ன அறிவித்துள்ளார்.

இன்று இலங்கை முழுதும் 50,000 பிச்சைக்காரர் இருப்பதாகவும் இவர்களில் 10,000 வரை நகரங்களைச் சுற்றியே உள்ளனர் என்றும், அமைச்சின் கணக்கெடுப்புப் புள்ளிவிபரம் அறிவிக்கிறது.

பிச்சையெடுத்தல் தடையை முதலில் கொழும்பில் நடைமுறைப்படுத்தி பின்னர் படிப்படியாக அது ஏனைய நகரங்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினை: ரஜீவுக்கு புஷ் சொன்ன ஆலோசனை என்ன?

இலங்கை — இந்திய ஒப்பந்தத்திற்கு அமெரிக்க அரசு பின்னணியாக இருந்துள்ளதென்றும், இவ்வொப்பந்தத்தை சோவியத் யூனியன் விரும்பாதிருந்த போதிலும் இந்தியாவுடனான தனது நட்பை முறித்துக்கொள்ளக் கூடாதென்பதற்காக காலம் தாழ்த்தி அமைதியான முறையில் ஆதரித்ததென்றும் அரசியல் ஆய்வாளர் மத்தியில் நீண்டகாலமாக கருத்து நிலவிவந்தது.

இவ்வொப்பந்தம் சம்பந்தமாக அமெரிக்காவின் நிலைப்பாட்டைப்பற்றி ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் பெரும் ஐயப்பாட்டை எழுப்பி விரிவான அறிக்கை யொன்றை சமீபத்தில் புதுடில்லியில் வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன—

இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்க அரசின் அபிப்பிராயத்துக்கும், இந்தியத் துருப்புக்கள் இலங்கையில் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க அரசு காட்டும் ''பெரிய அக்கறைக்கும்'' பெரும் தொடர்பு இருப்பதாக வி. பி. சிங் ஐயமெழுப்பியுள்ளார்.

மேலும் அவர் அந்த அறிக்கையில் ஒரு திடுக்கிடும் தகவலையும் கூறியுள்ளார். அதாவது இன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் புஷ், 1987 ஆம் ஆண்டு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். அப்போது இலங்கைப் பிரச்சினை பற்றி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று ரஜீவ் காந்திக்கு புஷ் விபரமாக ஆலோசனை கூறியிருந்தாராம்.

அந்த ஆலோசனை பற்றிய விபரங்களை வெளியிடுமாறு வி. பி. சிங் அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்.

புஷ் கூறிய ஆலோசனையின் விளைவுதான் இலங்கை—இந்திய ஒப்பந்தமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இதனைவிட வேறு மர்மங்களும் புஷ்ஷின் ஆலோசனையில் இருந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் அமெரிக்கா, பொறுத்த நேரத்தில் தொட்டில் கயிற்றை அறுத்துவிடும் யுக்தியும் படைத்தது.

## அனுராவின் நிதானம்

இந்தியப்படை வெளியேற்றம் தொடர்பாக பிரேமதாசாவின் அரசு தீவிரத்தன்மையைக் கடைப்பிடிக்குமானால் நாடு பிளவுபடும் சூழல் ஏற்படுமென்றும் இதனால் இவ்விவகாரத்தில் பிரேமாவின் அரசு நிதானப்போக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அனுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார். இவ்வாறே காமினி திஸாநாயக்கவும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ''நிதானம்'' நாடு பிரிந்துவிடும் என்ற அச்சத்தால் எழுகிறதேயொழிய தமிழ் மக்களுக்கு இதனால் ஏற்படப்போகும் நன்மை தீமையைக் குறித்தல்ல என்பது தெளிவு.

## நிரந்தர யுத்த நிறுத்தம் — விடுதலைப்புலிகள் சம்மதம்

தற்போது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை எதிர்பார்த்ததற்கும் மேலாக வெற்றியைத் தந்துள்ளதாகவும், அதற்கு எடுத்துக்காட்டாக இலங்கை அரசோடு நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கு புலிகள் சம்மதித்துள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. இது ஜனாதிபதி பிரேமதாச மேற்கொண்ட சமரச பேச்சுவார்த்தை அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியாகும் எனவும் அறிவித்துள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் நிரந்தர் யுத்தநிறுத்தம் பற்றி விமர்சித்த பி.பி.சி. செய்தியாளர், எல்.ரீ.ரீ.ஈ. யினர் நிரந்தர யுத்த நிறுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண அரசும் இலங்கை அரசும் ஆட்சேர்ப்பு

''இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் வாபஸ் பெறப்படும் பட்சத்தில், வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, இலங்கை ராணுவத்திற்கு எதிராகப் போராடுவதற்காக ஏராளமான இளைஞர்களை மக்கள் தொண்டர் படையில் சேர்ப்பது எமக்கு அவசியமாயுள்ளது'' என வட-கிழக்கு மாகாண முதல்வர், கூட்டம் ஒன்றில் பேசியதாக சண்டே ரைம்ஸ் அறிவித்துள்ளது.


மேலும் இதே பத்திரிகை இது சம்பந்தமாகக் கூறியுள்ளதாவது:- ஏறக்குறைய 4000 இளைஞர்கள் வரை தொண்டர் படைக்கான பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளதாகவும் வேறு தகவல்களின்படி, ஏறக்குறைய 8000 இளைஞர் வரை இந்திய அமைதிப்படை முகாம்களுக்கருகில் உள்ள இடங்களில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. இன்னும் 200 பேர்வரை இந்தியாவிற்குப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை 45,000 துருப்புகளைக் கொண்ட இந்தியப் படை இலங்கையிலிருந்து விலகிக் கொள்ளும் பட்சத்தில், அதன் வெற்றிடத்தை நிரப்ப தற்போது இலங்கையரசிடம் உள்ள 32,000 துருப்புகளோடு மேலும் 5000 பேர்வரை சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர் என இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி இலங்கை ராணுவத் தளபதி ஹமில்ரன் வணசிங்க கருத்துத் தெரிவிக்கையில், மேற்படி புதிய ராணுவப் பயிற்சிக்கு மட்டும் 2000 மில்லியன் ரூபாவரை செலவிடப்பட வேண்டிவரும் எனக் கூறினர்.

## இலங்கை அரசியலில் திடீர் மாற்றம் ஏற்படுமா?

ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கம், தற்போது என்றைக்குமில்லாத நெருக்கடிக்குள்ளாகியிருப்பது, இலங்கை அரசியலில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய சாத்தியப் பாடுகளைக் கொண்டுள்ளதாக கடந்த திங்கள் வெளியான பி. பி. சி. செய்தி

(12ஆம் பக்கம் பார்க்க)




'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை** THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/–
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/–
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# யாழ். உதைபந்தாட்ட லீக் சரியாக இயங்குமா?

யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் சர்வதேச உதைபந்தாட்ட விதிகளுக்கு அமைவாகவும், இலங்கை உதைபந்தாட்டச் சங்க விதிகளுக்கு அமையவும், யாழ். உதைபந்தாட்ட லீக் விதிகளுக்கு அமையவும் யாழ். நகரிலுள்ள கழகங்களைத் தம்முடன் இணைத்து உதைபந்தாட்டப்போட்டிகளை நடாத்திக் கொண்டு வருகின்றது. அப்படி நடாத்திக் கொண்டு வருகின்ற போட்டிகளிலே காலங்காலமாக ஏற்படுகின்ற அசம்பாவித சம்பவங்களுக்கு மூல காரணகர்த்தாக்கள் யார்? என்பதை இன்றுவரையும் இனங்காண்பதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

எப்படியான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இப்படியான அசம்பாவித சம்பவங்கள் யாரால் ஏற்படுவதற்கு வழிவகுக்கப்படுகின்றது என்பதை இனங்கண்டு அதற்குரிய முயற்சி எடுத்து அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறுமல் தடுப்பதற்குரிய முறைகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்திருந்தால் இவ்விதமான அசம்பாவித சம்பவங்கள் இடம் பெறமுடியாத சூழ்நிலை உருவாகிக் கொண்டு வந்திருக்கும். இவைகளை நடைமுறைக்கு கொண்டுவரக் கூடிய முயற்சிகளை மேற் கொள்ளுவதற்கு துணிவற்ற நிலையினாலும் போட்டிகள் நடைபெறும்பொழுது ஏற்படுகின்ற அசம்பாவித சம்பவங்களுக்கு காலங் காலமாக ஒரு விளையாட்டுக் கழகத்தை மட்டுமே இடைநிறுத்திக் கொண்டு வந்துள்ள நடைமுறைகளைக் கவனிக்கும்பொழுது, அந்த ஒரு குறிப்பிட்ட கழகத்தின் உதைபந்தாட்ட வளர்ச்சியை உருக்குலைக்கும் நோக்குடன் நன்கு திட்டமிடப்பட்ட செயல் என்பது புலனாகிறது. ஏனெனில் சர்வதேச உதைபந்தாட்ட வரலாற்றிலேயே இடம் பெறாத நடைமுறைகள் யாழ். உதைபந்தாட்ட லீக் வரலாற்றினிலே இடம் பெற்றுள்ளன. அதாவது பார்வையாளர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற அசம்பாவித சம்பவங்களுக்கு போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்களில் அதுவும் குறிப்பாக ஒரு கழகம் மட்டுமே இடை நிறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் வேறு கழகங்களின் போட்டிகள் நடை பெறும் பொழுது பார்வையாளர்களுக்கிடையிலும், விளையாட்டு வீரர்களுக்கிடையிலும் நிகழ்கின்ற அசம்பாவித சம்பவங்களுக்கு எந்தவொரு கழகத்திற்கும் அபராதமோ, தடையுத்தரவோ யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் வழங்கியுள்ளதாக அறியவில்லை. ஆனால் ஒரு குறிக்கப்பட்ட கழகத்திற்கு மட்டுமே அபராதம், தடையுத்தரவு வழங்குவதற்கு யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் செயல்படுகின்ற முறையின் உள்நோக்கம் என்னவென்பது எமக்கு புரியாத புதிராக இருக்கின்றது,



இவைகளுக்கு உதாரணமாக அண்மையில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்திலே யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்திய அப்போதிக்கரிஸ் சுழற்கிண்ண லீக் சுற்றுப் போட்டியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக A அணிக்கும், புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக A அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியிலே இரு கழகங்களும் மிகவும் பலம் வாய்ந்த கழகமாக போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலே சமமான நிலையில் போட்டி நிறைவுபெறுவதற்கு 8 நிமிடங்கள் இருக்கும் பொழுது பாடும்மீன் கழக அணி ஒரு கோலைப் போட்டு முன்னணியில் திகழ்ந்துகொண்டிருந்த வேளையில் இரண்டாவது கோலைப் போடுவதற்கு முன்னேறிக்கொண்டு போகும் வேளையிலே எதிர்க்கழக அணி விளையாட்டைக் குழப்பும் முழு நோக்குடன் முறை தவறி ஆட்டத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்தி விளையாட்டு மைதானத்திற்குள் ஆதரவாளர்கள் புகுந்தவுடன் அவர்களுடன் இணைந்து எதிர்க் கழகத்தின் B அணியின் வீரர்களும் மேலங்கியுடன் (யேசியுடன்) அசம்பாவித சம்பவங்களில் ஈடுபட்டனர், இச் சம்பவம் எம்முடன் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முக்கிய நிர்வாகிகள் உட்பட சகலரும் அறிந்த உண்மைச் சம்பவம்; இதை எவரும் மறைக்க முடியாது.

இச்சம்பவம் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தும் நிலையில் மறுக்க இயலாமல் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தினர் லீக் நடாத்திக்கொண்டிருக்கும் அப்போதிக்கரிஸ் சுழற்கிண்ண சுற்றுப் போட்டிகளிலிருந்து விலகிக் கொள்வதாக பத்திரிகை வாயிலாக செய்திவிடுத்துள்ளார்கள். அசம்பாவித சம்பவங்களுக்கு இதுவரை காலத்திலும் குறிப்பாக ஒரு கழகத்தையே இடை நிறுத்திக் கொண்டுவந்த யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் வழமையான தங்கள் செயற்பாட்டின் பிரகாரம் சம்பந்தப்பட்ட கழகத்தை இடைநிறுத்தியும், அதற்கு அபராதம் விதிப்பதும்தான் நீதியும் நியதியுமாகும். ஆனால் வழமையான செயற்பாட்டிற்கு முரணான முறையில் இம்முறை சம்பந்தப்பட்ட கழகத்துடன், சம்பந்தப்படாத கழகத்தின் மூன்று (3) அணிகளையும் இடைநிறுத்தம் செய்தும், அபராதமும் விதித்துள்ளமை ஒரு கழகத்தின் வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கம் எனவே கருத வேண்டியுள்ளது.

பார்வையாளர்களினால் ஏற்படுகின்ற அசம்பாவித சம்பவங்களுக்கு கழகங்கள்தான் முழுப் பொறுப்பென தவறான நோக்குடன் கழகங்களுக்குத் தண்டனை வழங்குகின்ற யாழ். உதைபந்தாட்ட லீக்கினது நிர்வாகத்தின் முறையற்ற செயலை உதைபந்தாட்ட வளர்ச்சியில் முழு ஆர்வமுள்ள எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகையினால் தவறான நோக்கில் கழகங்களுக்கு விதித்த அபராதம், தடையுத்தரவை மீள் பரிசீலனை செய்து அப்போதிக்கரிஸ் சுற்றுக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் அக்கழகங்களின் அணிகள் தொடர்ந்தும் கலந்துகொண்டு போட்டி சிறப்புடன் நடைபெற்று நிறைவுபெறுவதற்கும், லீக்கில் இணைந்துள்ள சகல கழகங்களினதும் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் நல் நோக்குடன் லீக் நிர்வாகம் பூரண ஒத்துழைப்பை நல்கிச் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

— ச. சிறில்
யாழ்ப்பாணம்

# மாறி மாறி வரும் முன் அணியும் பின் அணியும்

அரசியல் வாதிகளில் ஆட்சிபீடத்திலிருந்த முன்னணியினர் பலர் பின்னணிக்குப் போவதும், பின் அணியிலிருந்தோர் முன் அணிக்கு வருவதும் எல்லோரும் அறிந்ததே. ஜனநாயக நாடுகளில் அதனைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே இருப்பதால் அது மக்களின் விருப்புக்கு ஏற்பவே பெரும்பாலும் அமைவதுண்டு. ஆனால் கொம்யூனிச நாடுகளில் இது ஒரு குறிப்பிட்ட கட்சியின் தலைமைப் பீடத்தின் அதிகாரத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது அல்லது கட்சியின் அதிக செல்வாக்குப் பெற்ற குழுவினால்.

சீனாவில் அண்மையில் நிகழ்ந்துள்ள சில பதவி மாற்றங்கள் இதற்கு கட்டியங்கூறுவதாய் அமைந்துள்ளது. டெங் ஷியாவோ பிங் சீனாவில் ஏற்படுத்திய பெரிய அளவிலான பொருளாதார மாற்றங்களுக்கு பக்கபலமாகப் பத்து வருடங்கள் இருந்தவரான ஷாவோ ஷியாங் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி உள்ளிட்ட சகல பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். இதில் விசித்திரம் என்னவென்றால் இவரது பதவி நீக்கத்திற்குப் பெரிதும் காரணமாயிருந்த டெங் ஷியாவோ கூட முன்னர் மாஓவினால் முன்னணியிலிருந்து பின் அணிக்குத் தள்ளப்பட்டவராவர். டெங் முன் அணியினராக இருந்த போது, சீனாவுக்கு விஜயம் செய்த குருச்சேவிடம் அவரை அறிமுகப்படுத்திய மாஓ "இந்தச் சின்ன மனிதர் வருங்காலத்தில் பெரிய செயல்களைப் புரிவார்" எனக்கூறி வைத்தார். ஆனால் அந்தப் பெரிய செயலுக்குரியவர் என மாஓ குறிப்பிட்ட அந்தப் 'பெரிய' மனிதரே பின்னாளில் அவரது பதவிகள் பறிக்கப்பட்டு பின்—அணிக்குத் தள்ளப்பட்டவரே. ஆனாலும் தமது 'பெரிய' செயலின் உந்துதலினால் போலும் எலி பிடிக்கும் பூனைத் தந்திரத்தோடு காத்திருந்து மாஓவின் மறைவுக்குப் பின்னால் சீனாவின் அதிகாரபீடத்தை 'லபக்' கென்று கௌவிக் கொண்டார். அதிகாரத்துக்கு வந்த உடனேயே அவசரப்பட்டு மாஓ மீது விமர்சனங்களை வைக்காமல் மாஓவைப் புகழ்ந்து புகழ்ந்து தள்ளியே இறுதியில் மாஓவின் புதைகுழியிலும் (தியனென்மென் சதுக்கத்துள் அமைந்திருப்பது) கைவைக்கும் அளவு மாஓவின் செல்வாக்கை மங்கச் செய்யுமளவிற்கு உயர்ந்து விட்டார்.

**எஸ். இரத்தினம்**

தியனென்மென் சதுக்கத்தில் இருந்து மாஓ வின் சடலத்தை அகற்றும் அளவுக்கு திட்டம் தீட்டியிருந்த டெங் அதே சதுக்கத்தில் கூடுதல் ஜனநாயக கோரிக்கைகளை முன் வைத்துப் போராடிய ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்களுக்குப் புதைகுழி தோண்டிய புண்ணியத்தையும் ஈட்டிக் கொண்டார். (மாஓ மாபெரும் செயலை இவர் வருங்காலத்தில் ஆற்றுவார் என முன் உரைத்தது இதைத்தானோ) சீனாவின் சில பகுதிகளில் சுதந்திர வர்த்தக வலையங்களை ஏற்படுத்தி அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாட்டினர் சுதந்திரப் புருஷர்களான உல்லாசப் பிரயாணிகளாக உலாவவும், பச்சை விபச்சார நுகர்வுச் சந்தைகளை அனுமதித்து சீனாவில் கலாசார சீரழிவுகளையும் உண்டாக்க காரணமான அதே டெங்கின் அதிகார பீடம் தான் இன்று கூடுதல் ஜனநாயகத்துக்கு தியனென்மென் சதுக்கத்தில் புதைகுழி தோண்டியுள்ளது. தாமும், தம்மைச் சார்ந்த உறவினரும், அதிகாரிகளும் சுரண்டவும் ஊழல் செய்யவும் வசதியாக கட்டுப்பாடற்ற பொருளாதார சந்தைகளும், அந்த வாய்ப்புகள் பறிபோகாதிருப்பதற்காக ஆயுசு பூராவும் அரசியல் அதிகாரம் தமக்கே ஆக வைத்திருக்க அரசியல் சர்வாதிகாரமும். இதுதான் டெங்கும், கட்சியின் கடும் போக்கினரும் போட்டுவைத்த கணக்கு. இந்தக் கணக்கில் கூடுதல் ஜனநாயகத்துக்கு ஆதரவாளராயிருந்த ஷாவோ ஷியாங் கழித்தல் செய்யப்பட்டுள்ளார். ஆனால் காலமாற்றம் கழித்தல் செய்யப்பட்டிருந்த டெங்கை எப்படி உயர் மட்டத்துக்கு உந்தித் தள்ளியதோ அது ஷாவோ ஷியாங் விஷயத்திலும் நிகழாது என்றில்லை. கட்சி அங்கத்தினர் பதவியில் இருந்தும் அவர்களை எடுக்கப்பட்டிருக்கின்றாரோ என்னவோ அப்படியிருப்பினும் சீனாவில் நிகழும் பூகம்பம்போல அரசியல் தளத்திலும் பூகம்ப புரட்டல்கள் நிகழாது என்றில்லை. அதற்கான வெடிப்புத் தாவல்கள் அதை இனங்காட்டி நிற்கின்றன. "இன்றைய மன்னன் நாளைய கைதி இன்றைய கைதி நாளைய மன்னன்" என்ற வாக்கியத்துக்குரிய எத்தனை உதாரணங்களை வரலாறு காட்டியிருக்கிறது. இதற்கு டெங்கும் விதிவிலக்கில்லை. □

## S. R. இன் ஆரம்பம்...?

நீங்கள் வெளியிடும் பத்திரிகையான திசையில் ஜூன் மாதம் 16 ம் திகதி இதழில் ஒன்பதாம் பக்கத்தில் (கந்தசாமி என்றொரு கர்ம வீரன்) என்னும் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"அதன் பின்னர் 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சற்றடே றிவியூ என்னும் பத்திரிகை ஆரம்பித்தார்" என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

சற்றடே றிவியூவையும் அதன் சகோதரப் பத்திரிகையான திசையையும் வாசித்த/வாசிப்பவன் என்ற முறையில் இத்தகவல் எனக்கு அதிர்ச்சியை தந்துள்ளது.

எனக்குத் தெரிந்த வரையில் சற்றடே றிவியூ 1982 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கப்பட்டு ஜூன் 1983 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டது.

— செல்வி க. கமலா
மாவிட்டபுரம்

**ஆசிரியர் குறிப்பு:**
அச்சுப்பிசாசின் விளையாட்டினால் ஏற்பட்ட தவற்றினை வாசகர் மன்னிக்கவும்.

# இவர்களையும் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்

அண்மைக்காலமாக சமூக, பொருளாதார, அரசியல் விடிவைநோக்கி ஆரம்ப அடியை எடுத்து வைத்திருக்கும் மலையக மக்கள், அதில் பெண்களின் பங்களிப்பைப் பற்றி சித்தாந்த, யதார்த்த ரீதியான படிப்பினைகள் எவ்வாறு இருந்து வருகின்றன என்பது பற்றிய தெளிவையும், மலையக மாதர்கள் பற்றிய நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டியதையும் வேண்டி நிற்கின்றனர்.

சர்வதேச ரீதியாக பல்வேறு நாடுகளிலும், சமூகங்களிலும், பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதும், அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதும்ஜீரணிக்க முடியாத உண்மையாகும். பெண்கள் அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ள எந்த சமூகமும் விழிப்புப் பெற்றதாகவோ, புரட்சிசெய்து விடுதலை பெற்றதாகவோ. அபிவிருத்தியடைந்ததாகவோ மதிப்பிட்டுக்கொள்ள முடியாது. அவ்வாறுயின் அது மனித சமுதாயம் ஏமாற்றப்பட்டதாகவே இருக்க முடியும். இந்த சர்வதேச – இலங்கைப் பின்னணியிலேயே மலையகப் பெண்கள் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்படுவது பற்றிய விடயங்கள் குறித்து விளங்கிக் கொள்ள முடியும்.

18 ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட முதலாளித்துவ விஸ்தரிப்பு நடவடிக்கையின் போது, இலங்கைப் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கைக்காக கொண்டு வரப்பட்ட தென்னிந்திய மக்கள் கூட்டத்தில் பெண்களின் பங்கு சரிஅரைவாசியாக இருந்தது. இந்தியாவில் அரை நிலப்பிரபுத்துவ தலைகளால் கட்டுண்டிருந்த சாதி, குல, சமய அடக்கு முறைகளுக்கு உட்பட்டிருந்த அம்மக்கள் அதே புரையோடிப்போன அம்சங்களுடனே இலங்கையின் மலைகளில் குடியேற்றப்பட்டனர். இதிலும் பெண்கள் அடிமைக்குள் அடிமைகளாக வாழத்தலைப்பட்டனர். இது முதலாளித்துவ சுரண்டல் வாதிகளுக்கு வர்க்க ரீதியான பிளவை வளர்ப்பதற்கு ஆதாரமாக இருந்து வந்தது.

பி. சிவப்பிரகாசம்

தோட்டத்துறை பெரிய கங்காணி முறைமை பெண்களை பல்வேறுமுறைகளில் அடிமைப்படுத்துவதனூடாகவும், அவர்களின் சாதாரண மனித உணர்வுகளை மழுங்கடித்து விடுவதன் மூலமும், அடிப்படை மனித உரிமைகளை வழங்காது விடுவதன் மூலமும், ஆண்களுக்கு சமூகத்தில் உயர் அந்தஸ்து வழங்கப்படுகின்றது என்று காட்சி திரிபுபடுத்தி பெண்களிடம் உழைப்புச்சுரண்டலைஉச்சமாக மேற்கொண்டனர். ஆண்களைவிட பெண்களை வேலைக்கமர்த்துவதன்மூலம் குறைந்த கூலியை வழங்கலாம், உச்ச சிரமத்தை பெற்றுக்கொள்ளலாம் பெண்களின் இயல்பான மானிட எதிர்ப்புகளை முறியடித்துவிடலாம் என்று ஆங்கிலேயகாலனித்துவ வாதிகளும் முதலாளித்துவ அடிவருடிகளான பெரிய கங்காணிகளும் எண்ணம் கொண்டிருந்தனர். அதையேசெயல்படுத்தியும் வந்தனர். இன்றும் கூட பெருந்தோட்டத் துறை தொழிற்சேனையில் 52% மேல் பெண்களே பங்கெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோஷலிஸகோட்பாட்டாளர் அகஸ்ட் பெல் குறிப்பிடுவது போன்று "அடிமைத்தனத்தை ருசிபார்த்த முதல் மனித ஜீவி பெண்தான். அடிமை என்ற கருத்து உருவாகும்முன்பாகவே அடிமைப்பட்டவள் பெண்" இப்பெண்களும் அடிமைப்படுத்தப்பட்டே வருகின்றனர். மலையக தோட்டப் பெண்களைப் பொறுத்த வரையில் தமது உழைப்புச் சக்தியை விற்பதன் மூலமேயே உயிர்வாழ முடியும், என்ற அடிப்படையில் வாழும் பெண்கள் இங்கு குடும்பப் பெண் என்ற முறையிலும், தொழிலாளி என்ற முறையிலும் இரு ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகின்றனர்.

நிலப்பிரபுத்துவ அமைப்பிலும், முதலாளித்துவ அமைப்பிலும் சுரண்டலை மேற்கொள்வதன் பொருட்டு பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட விதிமுறைகள் படு மிலேச்சத்தனமாக பின்பற்றப்படுவதுதோட்டப் பகுதியிலேயென்முல் மிகையாகாது. வீடுகளிலே சிறு பெண்பிள்ளைகள் சுமாராக ஒரு நாளைக்கு 8—12 மணித்தியால வேலைகளுக்கு உட்படுத்தப்படுகிறுர்கள். குறிப்பாக ஆண்பிள்ளைகளைவிட பெண் பிள்ளைகள் மிக அதிகமாக உழைப்பை வழங்க வேண்டியவர்களாக இருக்கிறுர்கள். பொதுவாக பூப்பெய்திய ஒரு பெண்பிள்ளை 'பெரியபிள்ளை' என்ற நாமத்துடன் முழு குடும்பப் பொறுப்பையும் ஏற்கவேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றுள். வீட்டு வேலைகளை செய்தல்.சமைத்தல் சிறு பிள்ளைகளை கவனித்தல், தோட்டத்தில் தொழில் செய்தல், பெற்றோருக்கு தேநீர் கொண்டு செல்லுதல்,போன்ற வேலைகள் இவற்றில்சிலவாகும், ஆனல் ஆண்பிள்ளைகள் இவ்வாறுன அடக்கு முறைகளுக்கு உள்ளாவது குறைவாகவே இருக்கின்றது.

மறுபக்கமாக மலையகத்தில், தீவின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது கல்வி மட்டம் மிகக் குறைவு என்பது அறிந்ததே. தீவளாவிய ரீதியல் 86.5% இருக்க பெருந்தோட்டத்துறையில் அது 65% மாகக் காணப்படுகின்றது. இந்நிலைப்பாட்டில் ஆண்பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள் பெண்பிள்ளைகளுக்கு மறுக்கப்படுகின்றன. "பெண்கள் படித்து என்ன செய்யப்போகிறுர்கள்? சட்டி பானை கழுவத்தானே போகப் போகிறுர்கள்" என்ற புரையோடிப் போன வாசகத்தைப் பயன்படுத்துவார்கள். பொதுவாகப் பூப்பெய்த உடன் பெண்பிள்ளைகளின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைப்பது வழக்கமாகிவிட்டது.

மலையகப் பிரதேசங்களில், தீவின் ஏனைய சமூகங்களை விட ஒரு எதிர் மாறுன செயல்பாட்டை அவதானிக்கலாம். அதாவது பெண்பிள்ளைகளை குடும்பத்திற்கு ஒரு பாரமாக கருதுவதில்லை. ஏனெனில் பெண்களின் கல்விமீதான முதலீடு மிகக் குறைவாகவே பெற்றேறால் மேற்கொள்ளப் படுகின்றது. ஆண்களைவிட பெண்களின் உழைப்பின் மூலம் பெறப்படும் வருமானம் முழுவதும் குடும்பத்தை அடைகின்றது. தொடர்ந்தும் பெண்களின் உழைப்பைப் பெறுவதன் மூலம் வருமானத்தைத் தேடலாம். என்று பெற்றேர்கள் எதிர்பார்ப்பதும், ஆண்நிலைவாதிகள் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பெண்களின் உழைப்பில் வாழ முயற்சிப்பதுமாகும்: மற்றும், ஏனைய சமூக அமைப்புகளைப் போன்று சீதனப் பிரச்சினை வளர்ச்சிக் கட்டத்தை அடையாது, குழந்தை பருவத்திலேயே இருப்பதும், மனதிற்குப் பிடித்தவர்களுடன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள 'ஓடிப்போவதும்' சுலபமான விடயங்களாகி விட்டபடியால், பெண்கள் சமூகத்தில் அடிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் சுமையாகக் கருதப்படுவதில்லை.

வீட்டிலே பெண்கள் ஆண்களை வெகுவாக கனம் பண்ண வேண்டும். ஆண்களைக் கண்டவுடன் எழுந்திருக்க வேண்டும், கணவன் உணவருந்திய பின்தான் மனைவி உணவருந்த வேண்டும், ஆண்களின் மேல் முட்டி மோதாமல் நடந்து கொள்ளவேண்டும், என்பதெல்லாம் மிகக்கவனமாகக் கடைப்பிடிக்கப்படும்விடயங்களாகும். திருமணங்களின்போது சம்பந்தப்பட்ட பெண்களுக்கு எந்தச் சந்தர்ப்பமுமே வழங்கப்படாத அடக்குமுறையும் காணப்படுகின்றது. ஒரு பெண் யாரோ ஒருவனுக்கு எப்படியோ வாழ்க்கைப்பட வேண்டியுள்ளதுக் பெற்றேர் பார்த்த ஒரு மாப்பிள்ளையை தவிர ஒரு பெண் தன் மனதுக்கு பிடித்த இதய சுத்தியோடு ஒரு ஆணுடன் பழகுவதோ கல்யாணம் முடித்துக் கொள்வதோஅல்லது காதலிப்பதோ பயங்கரமான குற்றமாக தோட்டப் பிரதேசங்களில் கருதப்படுகின்றது.

தோட்டப் பிரதேசங்களில் காதல் போன்ற விடயங்களில் ஆண்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை. பெண்களே குற்றவாளிகளாகக் கருதப்படுகின்றனர். 'எப்படியெண்டாலும் ஆம்பில ஆம்பிலதான் அவன் பத்துப் பொம்பளையும் எடுப்பான்' என்ற ஆணுதிக்கவாதம் ஓங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே பொதுவாக ஆண்கள் மது அருந்திவிட்டு வந்து பெண்களைக் கொடுமைப்படுத்துவது மிக வருந்தத்தக்க விடயமாகும். தோட்டத் தொழில் துறையில் சுமாராக பத்து மணித்தியாலத்தைச் செலவிடும் ஒரு பெண் தன் குடும்ப – வீட்டு வேலைகளிலும் சுமார் ஐந்து மணித்தியாலத்தை செலவிட வேண்டியுள்ளது. வீட்டுவேலைகளில் ஆண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருக்கின்றது. குடும்பப் பொருளாதாரத் தீர்மானங்களில் கூட பெண்களுக்கு தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுவது மிக அருமையாகவே காணப்படுகின்றது.




பெருந்தோட்டத் தொழில் துறைகளிலே பெண்கள் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உள்ளாகின்றனர். அண்மைக் காலம்வரை (1984) சமசம்பளம் பெண்களுக்கு தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. வேதனத்தில் சுரண்டல், உழைப்பில் சுரண்டல், பாலியலில் சுரண்டல் என்பன மறைமுகமாக காணப்படும் பண்புகளாகும்; இவர்களின் குறைவான கல்வி மட்டத்தைப் பயன்படுத்தி வேதனத்தில் சுரண்டலை மேற்கொள்கின்றனர். பாலியல் சுரண்டலானது வேலை பெறும் நிருவாகத்தினரால் இப்பொழுது மறைமுகமாக மேற்கொள்ளப்படுகின்ற பொழுதும், ஆரம்ப காலங்களில் பெரிய கங்காணிகள் தாம் விரும்பிய எந்தப் பெண்ணுடனும்பாலியல் உறவை வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர். பெருந்தோட்டத்துறை மக்களின் சமூக-பொருளாதார அரசியல் உரிமைகளை தன்னகத்தே கொண்டிருந்தமையாலும், அவற்றுக்கு முழு கட்டுப்பாட்டாளராகவும், பொறுப்பாளராகவும் பெரிய கங்காணிகளே இருந்தமையாலும், பாலியல் சுரண்டலை அவர்கள் வெகுவாக மேற்கொண்டனர். ஆனல், காலப் போக்கில் அவை அருகி வந்தாலும்கூட இப்பொழுதும் மறைமுகமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இன்றைய மலையக தொழிற்சங்கப் பின்னணியில் கூட மாதர் சங்கங்கள், மாதர் கமிட்டிகள், மகளிர் அணிகள் என்பன பொய்மை நிறைந்ததாகவே காணப்படுகின்றன. இவ்வமைப்புகள் பெண்களின் பிரச்சனைகள், விடுதலை குறித்து எழுப்பப்பட்ட தன்னிச்சையான அமைப்புகள் அல்ல, சுரண்டல்வாத ஆணுதிக்க வாதிகளால், தங்களின் நலன் பேண உருவாக்கப்பட்ட அமைப்புகளாகும். இவற்றின் பின்னணியில் பெண்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து சமத்துவம் என்பன வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டபோதும் இன்று வரையும் பல்வேறு அடக்குமுறைகளுக்கும், அடிமைத்தனத்துக்கும் பெண்கள் உள்ளாக்கப்பட்டே வருகின்றனர். தொழிற்சங்கப் போராட்டங்களில் கூட பலவந்தமாக பெண்கள் கொணர்ந்து நிறுத்தப்படுகின்றுர்களே தவிர தன்னியல்பாக உந்தப்பட்டு வருவது தடைசெய்யப்பட்டே வருகின்றது.

பெருந்தோட்டங்களில் வேலைவாய்ப்பில் மிகப் பெரும்பாலான பெண்கள் அடிமட்டத்தொழில்களிலேயே ஈடுபடுகின்றனர். கணிசமான அளவினரே எழுதுவினைஞர்களாக தொழில் புரிகின்றனர். ஆனல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சகல தொழில்களிலும் ஆண்களே அங்கம் வகிக்கின்றனர். ஏன் ஒருபெண்ணுக்கு தோட்ட அதிகாரியாகவோ, உதவி அதிகாரியாகவோ ஒரு கள உத்தியோகஸ்தராகவோ கடமைபுரிய முடியாதா? ஏனெனில் இந்த சமூக அமைப்பை அப்படியே பேணிப் பாதுகாத்துக்கொள்ள இவ்வாறுன அடக்கு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மலையக அரசியற் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு பற்றி ஆராய்வதற்கு குறிப்பிடத்தக்க விடயங்களில்லை. இவ்வாறுன ஒரு சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் மலையகப் பெண்களின் நிலைப்பாடு பிரச்சினைக் குரிய தொன்றுகவிருக்கின்றது. மலையக மக்களின் விடுதலைக்காக நடவடிக்கைகள் முன்னெடுத்து வைக்கப்படும் இக்கால கட்டத்தில், பெண்களின் பங்களிப்பு அதில் சரி அரைவாசியாக இருக்க வேண்டும். ஆனல் விடை பூச்சியமாக இருக்கிறது. இந்த நிலைப்பாட்டில் பெண்கள் குறித்த அடக்கு, ஒடுக்கு முறைகள், அடிமைத்தனங்கள் உடைத்தெறியப்பட வேண்டும். இது குறித்துச் சிந்திக்காமல் முன்னெடுத்து வைக்கப்படுகின்ற எந்த நடவடிக்கையும் மலையகத்தில் மாத்திரமல்ல எந்தச் சமூகத்திற்கும் வெற்றியளிக்கப் போவதில்லை. எனவே சமூக மாற்றத்திற்காகப் போராடும் ஆண்களுடன், பெண்களுக்கும் சம உரிமை, அந்தஸ்து வழங்கப்படுகின்ற பொழுதே சமூக மாற்றம் சாத்தியமாகும். □

# கால்களை இழந்தவர்களுக்கு மறுபடியும் கால்கள்

கடந்தகால அனர்த்தங்களினால் தமது கால்களை இழந்து அல்லலுறும் எமது மக்களிற்கு, சேவை உணர்வுடன் அருந்தொண்டாற்றிவரும் யாழ். ஜெய்ப்பூர் பாதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு 1-7-89 இல் இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

திருமதி தே. குணநாயகம்
தலைவி, ஜெய்ப்பூர் பாதத் தொழிற்சாலை

யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் பாதத் தொழிற்சாலையின் இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளோம். இதற்கு இரு வருடங்களின் முன் எம்மிற் சிலரின் கடின உழைப்பினால் எமது ஸ்தாபனத்தை நிறுவக்கூடியதாக இருந்தது. கொழும்பிலுள்ள தேவையில் உதவும் நண்பர் கழகம் என்னும் நிறுவனத்தின் செயலதிபரான திருமதி சுவர்ண பேடினண்ட் வடக்கில் உள்ள எமக்கு விசுவாசமான அன்பும் விருப்பும் மீதூர ஜோண்டாக் ஹச்சிசன் (நோருப்) அவர்களுடன் எங்களை அறிமுகப்படுத்தியதற்கு நாங்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். வடக்கில் இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு அவர் எங்களுக்கு அளித்த மகத்துவமான ஆதரவிற்கு நாம் அவருக்கு எமது நன்றியையும் அன்பையும் செலுத்தக்கடப்பாடுடையவர்களாக இருக்கின்றோம். எமக்கு ஆதரவு நல்கிய டையகோனியா (DIAKONIA - சுவிடன்). ஐக்கிய இராச்சியத்திலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதி நிலையம், பருத்தித்துறையிலுள்ள பிரான்சு வைத்தியக் குழுவினர் ஆகியோருக்கும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். எமது ஆரம்ப செயற்றிட்டத்திற்கு நன்கொடை வழங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்களுக்கும், பிள்ளைகளுக்கும் மதிப்பளிப்பதோடு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இவ்வாறான உதவிகள் காரணமாக வேறு பொருட்களின் விலைவாசிகள் அதிகரித்தபோதிலும் ஒரு ஜெய்ப்பூர் பாதணியை ரூபா ஆயிரத்துக்குக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

எங்களுடைய இத்திட்டம் பல வெளிநாட்டு தூதராலயங்களாலும் தனித்துவமான மதிப்பும், பாராட்டுதலும் பெற்றிருக்கின்றது. எமது அடுத்த நடவடிக்கை யாதெனில் எமது தொழிற்சாலையை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் விஸ்தரித்து இளம்பிள்ளைவாத நோய்க்கும், நரம்பு சம்பந்த மானவேறு நோய்களால்பாதிக்கப்பட்டோருக்கும் உறுப்புகளைப்பொருத்தக்கூடிய ஒரு நிறுவனத்தை அமைப்பதாகும். இவ் வருடம் 8 கை அவயவங்களைப் பொருத்தியுள்ளோம். மேலும் எங்களிடம் பதிவு செய்த அனைவருக்கும் இவற்றைப் பொருத்த எண்ணியுள்ளோம். இவ்வாறு பொருத்தும் கை அவயவங்களை இந்தியாவில் இருந்தே தற்போது பெறவேண்டியுள்ளது. இதற்கு இலங்கைப் பணம் ரூபா 5000 செலுத்த வேண்டியுள்ளது. இங்குவரும் அங்கவீனச் சிறுவர்க்கு இதனைப் பொருத்துவதோடு எம் தொழிலகம் அங்கங்களை மட்டுமன்றி அவர்களுக்கு அகநிறைவையும் ஏற்படுத்துகின்றது.

எதிர்வரும் ஆடி முதலாம் திகதி இரண்டாண்டு நிறைவு விழா நடைபெற உள்ளது. இதுவரை எம் நிறுவனம் 237 ஜெய்ப்பூர் அங்கங்களைப் பொருத்தியுள்ளது. வெளியாரின் ஆர்வத்தாலும், இயற்கை அங்கம்போன்ற வசதியானதும் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடியதுமான அங்கங்களைப் பொருத்தும் இத்திட்டத்தைத் தொடரலாம் என நாங்கள் நம்புகின்றோம். பண வசதியற்ற சகோதர, சகோதரிகளுக்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள ஜீவகாருண்ணியம் படைத்தோர், நிதியுதவ முன் வந்துள்ளனர். குறைந்த உற்பத்திச் செலவினால் பலர் பயனடையக் கூடியதாக உள்ளது.

டாக்டர் பி.கே செத்தியும் (Dr.P.K.Sethi) அவரது குழுவினரான பேராசிரியர் காசில்வால், ராம் சந்திர சர்மா ஆகியோரும் ஜெய்ப்பூர் தொழிற்சாலைக்கு வேண்டிய தொழில்

11ஆம் பக்கம் பார்க்க)

## ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

ஜெய்ப்பூர் அங்கமானது இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் நகரத்தில் உருவாக்கப்பட்டது. சாதாரண இந்திய மக்களது தேவைகளுக்குப் பொருத்தமாக அமைந்தது. இது எலும்பு சிகிச்சை நிபுணரான டொக்ரர் P. K. செத்தி என்பவரால் உருவாக்கப்பட்டது. இலங்கை மக்களுக்கும் இவ்வகையான அங்கமே மிகவும் பொருத்தமானதாகும். இது உறுதியானது என்பதோடு பார்வைக்கும் உண்மையான அங்கம்போல் தோற்றமளிக்கும். இதனை மேற்கத்தைய நாடுகளில் தயாரிக்கப்படும் அங்கங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இது பாரம்குறைந்ததாகவும், விலை குறைந்ததாகவும் இருக்கிறது. மேற்கத்தைய நாடுகளில் தயாரிக்கப்படும் அங்கங்கள் சப்பாத்து அணியும் பாவனையாளருக்கே உருவாக்கப்பட்டது. ஜெய்ப்பூர் அங்கமானது கால் துண்டிக்கப்பட்டவரை சமனற்ற தரையிலும் சேற்றிலும் நீரிலும் நடக்கவும், மரங்களில் ஏறவும், மலைகளைக் கடக்கவும், துவிச்சக்கர வண்டியில் ஓடவும், குந்தி இருக்கவும், சப்பாணிகட்டி இருக்கவும் அனுமதிக்கிறது. இதைவிட ஜெய்ப்பூர் காலினை மிக விரைவாகவும், இலகுவாகவும் உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது. ஏனெனில் இதற்குரிய மூலப்பொருட்களை இங்கேயே பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன் அடிக்கடி பழுதுபார்க்கவும் தேவையில்லை. □

# இலங்கை — இந்திய ஒப்பந்தம்

ஏ. பி. வெங்கடேஸ்வரன்
(இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர்)

1987 ஜூலை 29 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தம் என்ற குழந்தையை இரண்டு வருடங்களுக்குப் பின்னர், தற்போது இலங்கை ஜனதிபதி அடக்கம் செய்வதற்குத் தீர்மானித்தாலும் அக்குழந்தையின் பெற்றோர்களில் ஒருவரான இந்தியா அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறது. இத்தனைக்கும் இந்தியாவுக்கும்இலங்கைக்கும் இடையே நட்புறவு ஒப்பந்தம், பரஸ்பர புரிந்துணர்வு, இணக்கம் என்று பெரிதாக பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கிற இந்தச் சூழலில்தான் இந்த மறுப்பும் இந்தியாவிடமிருந்து எழுந்திருக்கிறது.

மேற்படி ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட காலத்தில், இலங்கையிலுள்ள மூன்று புனித ஸ்தலங்கள் பற்றிய

## பிரேமதாஸவின் செய்தி

கற்பனைக் கதையொன்று உலவ விடப்பட்டது. இலங்கை—இந்திய ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த சிங்கள அரசியல் வாதிகள், அநுராதபுரத்துக்கு விஜயம் செய்து, புனித அரசமரத்தடியில் குழுமி புத்தரிடம் தமக்கு (ஒப்பந்தத்தின் மூலம்) இழைக்கப்பட்ட துன்பத்தை நீக்குமாறு முறையிட்டனர். ஆனால் புனித அரசமரமோ, தானும் இந்தியாவிலிருந்தே கொண்டுவரப்பட்ட காரணத்தை முன்வைத்து இவர்களுக்காக பரிந்துரைக்க முடியாதெனக் கூறிவிட்டது. ஆகவே இவர்கள் புத்தரின் புனித தந்தம் இருக்கும் இடமான கண்டிதலதா மாளிகைக்குச் சென்று முறையிட்டனர். அங்கும் இவர்களுக்கு புனித தந்தம் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டே இங்குகொண்டு வரப்பட்டதென்பதால், உதவி கிடைக்கவில்லை. பின்னர் இவர்கள் கதிர்காமக் கடவுளிடம் சென்று (கந்தன்) முறையிட்டபோது, கந்தன் தான் தமிழ் கடவுள் என்று சொல்லி உதவ மறுத்து விட்டாராம்! இறுதியில் இவர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் வந்து முறையிட்டபோது, அவர் தனக்கு அவர்களின் வேண்டுதலை நிறைவேற்ற மிக்க விருப்பம் இருந்தாலும் தனது பூட்டனர் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்தே வந்தவர் என்பதால் ஒன்றும் செய்ய முடியாதெனக் கூறிவிட்டாராம்?

இந்தக் கற்பனைக் கதைக்கு இன்னொரு பரிமாணத்தைத் தருவதாய்உள்ளது. 1989 ஜூன் 1ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள புத்த கோயில் கோபுரத் திறப்புவிழாவில் இந்தியப்படைகள் வெளியேற்றத்துக்குரிய காலக்கெடுவை ஜனதிபதி பிரேமதாஸ அறிவித்தபோது அவர் கூறிய புத்த தர்மம் பற்றிய போதனையாகும். அதாவது ஆயுதத்தைத் தூக்குவதால் அமைதியைப் பேண முடியாது என்பதே அது. இதையே 1986 இல் சார்க் மாநாட்டின்போது ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.

ஆனால் இந்த காலத்துக்குள் இலங்கையே யுத்த பூமியாயிற்று. ஜே. வி. பியினர் தென்னிலங்கைப் பகுதியிலும், எல். ரி. ரி. ஈ. யினர் வட-கிழக்குப் பகுதியிலும் கொடுத்த நெருக்கடியால் நாடு அல்லோலகல்லோலப்பட்டது. இவற்றிலிருந்து நாட்டை விடுவிக்கு முகமாகவே இவ்விரு இயக்கங்களோடும் தாம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என பிரேமதாஸ அறிவித்தார்.

ஆரம்பத்தில் ஜே. வி. பியை போலவே எல். ரி. ரி. ஈ. அதற்கு உடன்படா விட்டாலும் பின்னர் தனது முடிவை மாற்றிக்கொண்டு இன்று அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவதில் ஈடுபட்டுள்ளது.

ஆனால் வேடிக்கை என்ன வென்றால் புலிகள் இலங்கை அரச பேச்சுவார்த்தையை, இந்திய அரச நல்ல சகுனமாக

## அமைதிப் படை

எடுத்துக் கொள்ளாமல் அது தமக்கொரு பயமுறுத்தல், ஆபத்து என்று கருதுகிறது. இதையே இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சில் காணக்கூடியதாக உள்ளது. அதாவது இந்தியப் படைகள் வெளியேற முன்னர், அதன் இலங்கைப் பிரவேசத்தால் ஏற்பட்ட ''நன்மைகளைப் பாதுகாப்பது'' பற்றிய இந்தியாவின் புரிந்து கொள்ளல் ஆகும்.

இதைவிட முக்கியமானதென்னவெனில் ஈ.பி.ஆர்.எல். எவ். மாகாணசபை அரசும் ஏனைய சில போராட்டக் குழுக்களும்; இந்தியப்படை வெளியேறும் பட்சத்தில் தமிழீழம் கோரி தாம் ஆயுதம் தூக்கிப் போராட வேண்டி வரும் என அறிவித்துள்ளதே.

எந்தவித முன்யோசனையுமின்றி, இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பியதே எல்லாப் பிழைகளுக்கும் மூல காரணம் என்பதும் சிறு ஆறுதலை தற்போது தரக்கூடியது. ஆகவே உண்மையில் தற்போது தேவைப்படுவது, இலங்கை ஜனதிபதி அறிவித்துள்ள முடிவுக்கு எதிராக ஒருநிலை எடுக்கும்போது எதுவித புதிய சிக்கலும் அதனால் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே.

மேற்படி ஒப்பந்தத்தை, அமெரிக்கா உடனேயே பாராட்டி வரவேற்றது. ஆனால் ரஷ்யா பல மாதங்களுக்குப் பின்னரே தனது அபிப்பிராயத்தை, மிகக் கவனமாக வெளியிட்டது: அதில் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ''விளங்கிக் கொள்வதாக'' சொல்லப்பட்டது. இது சம்பந்தமாக இந்தியாவோ, மாபெரும் சாதனையே சாதித்துவிட்டதாக, அதுவும் உலகில் கடந்த 100 வருடங்களுக்குள் செய்யப்பட்ட ராஜதந்திரரீதியிலான நடவடிக்கைகளில் இதுவே முக்கியமானதென்றும் கொண்டாடியது.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் கூறவேண்டும். ''அரசுகள் எப்பொழுதும் உண்மையை மிச்சம் பிடிக்கிற தன்மையுடையவை'' என்பதே. அதாவது முழு உண்மையையும் அவை வெளியிடுவதில்லை.

இவ்வொப்பந்தத்தின் மூலம், இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி, மக்கள் இருதுருவங்களாக கருத்துவேற்றுமைப் பட்டுள்ளனர். மேலும் இலங்கைத் தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைக் கோராமல் இது செய்யப்பட்டதே மாபெரும் தவறாகும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# மாசலின் சிந்தனை பற்றி நம்மவரின் புதிய நூல்

சென்ற வாரத் தொடர்ச்சி

அதற்கு ஒரு காரணம் நாடகத்தையும் தத்துவத்தையும் தொடர்புபடுத்தி விவாதிப்பவைகளும் தனியே நாடகங்களை விமர்சிப்பவையும் வரன்முறைப்படுத்திய கட்டமைப்பு என்ற அளவுகோலைக்கொண்டு அளக்க முற்பட்டிருக்கலாம். அரங்கியலை நுண்ணிய (கட்புலனாகாத) வஸ்துவாக விவாதித்து, அதனால் மாசல் ''இந்த நாடகம்பற்றி(Le mort de demain) நாம் திரும்பத் திரும்ப விவாதித்து இப்போது அது எனக்கு ஏதோ அந்நியப் பொருளாகி விட்டது'' என்று குறிப்பிடுமளவுக்கு, அதன் கலைச்சுவையை அழித்து விட்டனர்.

இரண்டு நகரங்களில் மாசலின் தத்துவ—நாடகத்தொடர்பு பற்றிய ஆய்வு மன்றங்கள் நிகழ்ந்த போது, பங்கு பற்றிய அனைவரும் இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என ஒப்புக் கொண்டனர். நிகழ்ச்சி நிரல் வகுத்தபோது, மாசலின் சிந்தனையைத் தெளிவாக்கும் நாடகப் பகுதிகள் அவையினருக்கு மேடையில் காட்டப்பட்டன. அவற்றுள் ஒன்றில் (1973) பங்கு பற்றிய பெண்விமர்சகர் ஒருவர் மாசலின் அரங்கியலையும் பேர்க்மனின் சினிமாவையும் உள்ளத்தை உருக்கும் வார்த்தைகளால் ஒப்பிட்டுள்ளார். (முதலாம் உலகப் போரில் போர்க்கைதிகளின் கூடாரத்தில் பிற்கூறியவரது எழுத்துகள் உருவாயின.) மற்றொருவிமர்சகர் மாசலின் அரங்கியல் இன்றும் இளைஞருக்கு மிகவும் கருத்துள்ளதாய் விளங்குகிறது என்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் மாசலின் மதிப்பு அனைத்துலகிலும் பரவியது. சிறந்த இருப்பியல்வாத மெய்யியலறிஞர் என்ற புகழ் உச்சியை அடைந்த காலத்தில், அவரது நேய மிக்க அரங்கக் கலையும் பல மாண்புமிகு நிலையங்களில் மேடையேறிற்று. 1950 களின் ஆரம்பகாலத்தில் மேலும் அரங்கியல் உந்நத படைப்புகள் வெளிவந்தன. கடவுட் பக்தன் என்ற நாடகத்தை பாரிஸின் சிறந்த இரு நாடகமன்றங்களும், பல ஜேர்மன் நாடகக் கம்பனிகளும் மேடையேற்றிய போது, மாசலின் கலை வெற்றி பெற்றது. மனித நிலையில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறித் தானே வரும்; நிஜ உலகின் தவிர்க்க முடியாத ஏற்ற இறக்கம் மாசலுக்கும் நிகழ்ந்தது. Le Chemin de Crete என்ற நாடகம் ஒரு மாதம் மட்டுமே மேடையேற்றப் பட்டது. பல கஷ்டங்களும் பிரச்சனைகளும் அதன் தோல்விக்கு வழிசெய்தன. இதனால் மனம் குன்றிய மாசல் பின் பாரிஸில் மேடையேற்றுவதையே விட்டுவிட்டார்.

தமது இறுதிக்காலத்தில் மாசல் தத்துவத்திலும் அரங்கியலை அதிகம் விரும்பிப் பயன்படுத்தியதாகக் கூறுகிறார். ஏனெனில் தமது தத்துவக்கருத்துகள் முற்றுப் பெறாதவைகளாய் விடப்பட்டன; ஆனால் அரங்கியல் மூலம் தாம் ஏதோ சாதனை செய்துள்ளதாகக்கருதினார். நாடகம் பார்ப்போர் அல்லது வாசிப்போர் உள்ளத்தில் உந்நத ஒளியைக்காலும்;

அதனால் அவர்கள் ஒருபக்கச் சாய்வு, விருப்பு வெறுப்புகளைக் கைவிட்டு தன்(சொந்த) நிலையை எட்டலாம். அந்த 'உன்' னுடன் (முன்னிலைப் பொருளுடன்) இணைந்து கொள்ளலாம். உண்மையில் இந்த முதிர்ச்சி பெற்ற கருத்துப் புதியதல்ல. மாசல் 1937லேயே எழுதியுள்ளார்: ''கோணியஎம்சிற்றறிவுக்குஅப்பால் சென்று உண்மை உணர

மற்றொரு பரிமாணத்தைத் துலக்குகிறது போலும்'' என்பது அவர் வாக்கு.

மற்றொருவிமர்சகர் மாசலின் சிந்தனையில் மரணம் பெறும் இடம்பற்றிய கட்டுரையில், விசேடமாக மரணம் உயிருடனிருப்போர் மீது செலுத்தும் தாக்கத்தை விளக்க மாசலின் பற்பல நாடகங்களிலிருந்து எடுத்துக் காட்டுகளைத் தருகிறார். லெ மோந்த் காஸே என்ற நாடகத்தில் வரும் பெண் தான் காதலித்த மனி

வாகக் கொண்டிருக்கும் சிறப்பு அதுவே. கோஜியாஸ் என்ற பிளேற்றோவின் உரையாடல் நூலில் சோக்கிரற்றீஸ் செய்வது போல மாசலும் மனிதரிடையே மனப்பதிவுகளும் அனுபவமும் பரிமாற்றம் உறுவதை நிச்சயித்தற்கு உணர்ச்சிகளில் ஒற்றுமை இருக்கின்றதா எனப் பார்க்கிறார். சோக்கிரற்றீஸ் மெய்யியலை மேகமண்டலத்திலிருந்து இழுத்துக் கீழே உயிருள்ள மனிதருள்ள வீதிக்கும் வீட்டுக்கும் கொண்டுவந்து சேர்த்தார் அல்லவா? அவரின்

வேண்டுமானால் அந்தச் சிறப்பு நாடகத்துக்கே உரியது. எமது விவேகம், நுண்மதி எல்லாம் சிற்றறிவே; வளைந்த, கோணல் காட்சியைத் தருவதே என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆனால் நாடக அனுபவமோ ஓர் உயர்ந்த அவதானத்தை எமது ஒன்றிணைந்த அகத்திற்கு அளிக்கிறது. தூய நுண்மதி வெறும் நுண்ணிய வசனங்களால் திருப்தியடைந்துவிடவேண்டிய நிலையில் உள்ளது. அந்நிலையைக் கடந்துதான் தன்னில் இருக்க வழிவகுப்பது. (சொல்விற்பனத்தைத்தாண்டித் தன்னை அவதானிக்கும் உயர்ந்த உணர்வு நிலைக்கு இட்டுச் செல்வது.)''

மேலே குறித்த ஆய்வு மன்றம் ஒன்றில் பேசிய ஒருவர் மாசல் தொடக்க காலத்தில் விசுவாசம் பற்றி எழுதியது கடவுள் பற்றிய உள் பொருளியற் சான்று என எடுக்கலாம் எனக்குறிப்பிட்டார். அதில் விவாதத்தில் பங்கு

ஆங்கிலத்தில்:
அருட்திரு
**டொமினிக் A. ஜோஸப்**

பற்றிய மாசல் 'லா கிறேஸ்' ('அருள்') என்ற தமது நாடக பாத்திரம் ஒன்றின் இறுதி வார்த்தையான ''கடவுள் சுதந்திரர்'' என்பதனை எடுத்தாண்டு, பின் ''எனது ஆசிரியர் பேர்க்ஸனைப் போல நானும் உள் பொருளியற் சான்று கொண்டு நிரூபிக்க அஞ்சுகிறேன். ஏனெனில் இதில் நாம் வெறும் வார்த்தைகளுடன் மட்டுமே பழகுகிறோம்'' என விளக்கினார்.

மாசலுக்கு விருப்பமான நாடகம் லெ்சைன் தெலாகுரு. அதில் இருபாத்திரங்கள் போர்க்கைதிகளின் கொடூரப் பாசறையில் இறக்கும் போதும் தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுக்காக இரங்கியபடி வெகு சந்தோஷமாக மரணத்தைத் தழுவுகின்றார்கள். இதற்கு அவர்களது கிறீஸ்தவ விசுவாசமே காரணம்.

பலநாடகங்களில் மரணம் தூய்மைக்கு வழிகாட்டி வேறொரு விளக்கத்தைப் பெறுமாறு திரையை விலக்கி விடுகிறது. ''நாம் சற்றும் நினையாப் பிரகாரமான முகங்களைக் காட்டுகிறது. உலகம் பற்றிய

தன் ஆசீர்வாதப்பர்சபைத் துறவியாகியபின் இறக்கும் போது தனக்காகப் பிரார்த்தித்ததைக் கேள்விப்படுகிறாள். அதனால் அவளது பழைய உலகம் கரைந்துபோகிறது. அவளிடத்து அதிசயமிக்க மாறுதல் ஏற்படுகிறது. தன் கணவனை நேசிக்கத் தொடங்குகிறாள். (மனித நேயம் அன்பு, அருள் என்ற நற்பண்புகள் விருத்தியடைய மனிதவாழ்க்கையில் மரணம் ஓர் ஊக்கியாக உதவுகிறது)

அதே விமர்சகர் கூறுகிறார்; Le dard என்ற நாடகத்தில் வரும் பாத்திரம் இரண்டு இராச்சியங்களின் பிரதிநிதியாகத்திகழ்கிறார். அவன் மூலம் மாசல், றில்க் (ஜேர்மன் எழுத்தாளர்) கற்றுத்தந்த பாடத்தைச் சுட்டுகிறார் போலும்; அதாவது மரணம் வாழ்க்கையில் ஒரு சுற்றோட்டம். (உடலுக்குக் குருதிச்சுற்றோட்டம் போல அது உயிர்நாடியானது) கிறிஸ்தவ நம்பிக்கையின்சாரம் அது.

## 4

## வாதஇயல் முறை (Dialectical method):

பிற இருப்பியல் வாதிகளின் சிந்தனை வடிவக் கோலத்துக்கும் பிற மெய்யியல் முறைகளுக்கும் மாசலின் கோலத்துக்கும் வேறுபாடு அதிகம் உண்டு. அவர் பிறரில் இருந்து வேறுபட்ட சிந்தனைக் கோலம் அமைக்கக் காரணம் பிறர் செய்யாத புதுமையைப் படைத்துவிட வேண்டும் என்பதற்காக அன்று. ஆனால் இயன்றவரையில் மனித அனுபவத்திற்கு அண்மையிலேயே தமது சிந்தனையும் இருக்க வேண்டும் என்பதற்காகவே.

அவர் (வாதங்களையும் நிருபணங்களையும்) தொடர்ந்து கொண்டுபோகும் முறையை 'உயிருள்ள வாத இயல்' என வருணிக்கலாம். அதாவது அனுபவத்துக்கும் ஆழ்ந்த சிந்தனைக்கும், ஆழ்ந்த சிந்தனைக்கும் அனுபவத்துக்கும் இடையில் இடையீடற்ற உரையாடல் (தொடர்பு) ஒன்றை ஏற்படுத்த அது முயல்கிறது. வாழ்ந்து கண்ட அனுபவத்திற்கு வசீகரமாயிருக்கக் காரணம் அதுவே. சாதாரண மொழியும் (நிஜவாழ்விலிருந்து எடுத்துக்காட்டப்படும்) உதாரணங்களும் தம்முட் பொது

வாழ்வைப் பின்பற்றி, அதன் தூண்டுதலால் ஒளி பெற்ற மாசலும் மீண்டும் மெய்யியலைப் பூமிக்குக் கொண்டுவந்து சேர்க்க முயன்றார். இருப்பு வாதத்தின் சவால் என்ற நூலில் ஜோன் வைல்ட் கூறுவது போல, 'மாசல் கல்விக் கழக வகுப்பறைகளிலிருந்து மெய்யியலை நாடக அரங்குகள் உணவுச்சாலைகள், மனிதர் வாழ் இல்லங்களுக்குக் கொண்டுவந்தார்.' அவரது அற ஆர்வமும், வாழ்க்கைக்கும் சிந்தனைக்கும் இடையில் உள்ள அகன்ற இடைவெளியைச் சுருக்க அவர் செய்த முயற்சியும் அவரது அணுகுமுறையை விளங்கிக் கொள்ள உதவுகின்றன. ஒருவனது இருப்பு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் அன்று; அவன் தானாக அமிழ்ந்தி உணரும் யதார்த்தம்; அதுவே வாழ்க்கை என்பதை மாசல் நிச்சயித்தார். சோக்கிறற்றீஸ் போலவே மாசலும் இருப்புக்கும் அறிமுறைக்கும்

மொழிபெயர்ப்பும்
குறிப்புகளும் :
**ஆ. சபாரத்தினம்**

('தியறி') இடையில் உள்ள அடிப்படையான வித்தியாசத்தை அழித்துவிட முயன்றார்.

மாசலின் மெய்யியலை இரண்டாம் சிந்தனை மெய்யியல் எனலாம்; அதாவது புத்தி என்ற கண்ணாடியில் பிரதிபலிக்கும் ஆழ்ந்த சிந்தனையை மீளாய்வு செய்து, ஆழ்ந்து சிந்தித்தலாகும். அதன்படி ஆழ்சிந்தனையை உயர்த்தி நுண்விளக்கம் என்ற வார்த்தை ஜாலத்துக்குள் அடைத்துவிடாமல் அதனை பருப் பொருண்மை என்ற (சாதாரண மனிதன் விளங்கும்) கீழ்நிலைக்கு இறக்கிவிடுவதாகும். வாழ்வுக்கும், சிந்தனைக்கும் இணைப்பை ஏற்படுத்திவிடுவதாகும். மாசலுக்கு ஒரு மெய்யியல் ஆராய்ச்சி என்பது முழுக்கச்சுயமான கருமமாகும். ஆராய்ச்சியையும் பயனையும் பிரித்து வைக்கலாகாது; பயனைச்சுய அனுபவத்துக்குப்புறம்பான ஏதோ ஒரு உண்மையின் பால் தள்ளிவிடக் கூடாது; இதன்படி தத்துவ விசாரணை என்றதொடர் நிகழ்வின் நிஜமான கருமத்தில் தீவிரமாகப் பங்குபற்றுவதுதான். (பக்.65).

## 5

## தொழில்நுட்ப முறை பற்றிய மாசலின் நோக்கு:

சென்ற நூற்றாண்டிலும், அதற்குமுந்திய நூற்றாண்டுகளிலும் மனிதன் ஒருசிறிதளவேனும் கற்பனை செய்திராத அளவுக்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் தொழில் நுட்பவியல் வளர்ச்சியும் நிகழ்ந்துள்ளன என்ற உண்மையை மாசல் ஏற்றுச்சுவைக்கத் தவறிவிட்டார் என்ற குறைபாடு விமர்சகர்களால் முன்வைக்கப்படுகிறது. அவர் இவைகுறித்து மிக்க அவநம்பிக்கை கொண்டுள்ளார். தொழில் நுட்பவியலார் ஆன்மாவைப் பற்றி அவமதிப்பும் துச்சமாக மதிக்கும் போக்கும் கொண்டிருப்பது அவருக்கு அச்சத்தை விளைவித்தது. இருப்பு (சத்) பற்றிய உண்மையை நாடும் ஆவலும் அந்த அனுபவத்தில் திளைக்கும் ஆர்வமும் அவரை முற்றாக விழுங்கியதால் அதற்கு தொழில் நுட்பவியலும், தொழிற்கருவிகளும் தடையாக இருக்குமே என்ற வெறுப்பு அவர்பால் காணப்பட்டது. இந்த விமர்சனம் வரும் என்பதை உணர்ந்து மாசல் தமது பிற்கால நூல்களில் தமது நிலையை விளக்கியிருக்கிறார். [பார்க்க: **மனிதகுலத்துக்குஎதிரான மனிதர்** (ஆங்கிலத்தில் 1952 இல் வந்தது ; **ஞானத்தின் வீழ்ச்சி** (1954)

தொழில்நுட்பக் கருவிகள், முறைகள் 'தம் அளவில்' நடுநிலையின — நன்மையோ தீமையோ பயப்பன அல்ல. ஆனால் 'தம் அளவில்' தான். அவை ஒரு குறித்த மனித இருப்பு நிலையில் அவ்வாறே நடுவு நிலையில் நின்று விடமுடியாது. தொழில் நுட்பவியலும் அதன் உப-விளைவாகிய தொழில் நுட்ப சர்வாதிகார ஆட்சியும் (Technocracy) மனித குல வரலாற்றின் உளவியற் கட்டமைப்பின் கூறுகளே. மனிதனது 'ஆன்மீக' அம்சமான புத்தி என்ற அந்தக்கரணம் திறமையுடன் தொழிற்படும் போது, அவனது விவேகம் வளர்ச்சியுற்று, அவனது சுயநிலைக்கு (தன்னையறிதலுக்கு) தடையான தீய பயன்களை மாற்ற வேண்டும். பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்ட (பிரச்சனாதீத) தளத்திலேயே மனிதனது இந்த வரலாற்று வளர்ச்சியை விளங்கிக் கொள்ள முடியும். வரலாற்றுக்கு ஏதாயினும் உட்பொருள் உண்டென்றால் அதை மர்ம நிலையில் (கூறொணாத, நினைக்க ஒண்ணாத அதீத நிலையில் தான்) தெளிவுற நிச்சயிக்கலாம். வரலாற்றைப் புறத்தே (புலன்களால் ஆராய்ந்து) கண்ட அறிவு போலக் கருதி, வரலாற்றுக்குப் பொருள் உண்டு என எவனும் பிரகடனம் செய்ய முடியாது. நாங்கள் வரலாற்றுடன் ஒன்றிணைந்துள்ளோம்; எனவே அது எமக்குப் புறத்தில் உள்ளது போலக்கருதி அது பற்றித் தீர்ப்புக் கூறமுடியாது. ஆன்மீக தளத்தில் மட்டுமே வரலாற்றுக்குப் பொருள் உண்டு என்ற உண்மையை வெளியிடலாம். இந்த நிச்சய வாக்கு சந்தேகத்துக்கு இடமின்றி, கட்டுப்பாடு எதுவு

(11ஆம் பக்கம் பார்க்க)




# திசையின் சிறுகதைகள்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் 28-5-89 அன்று சித்திரை மாத பத்திரிகைச் சிறுகதைகள் என்னும் தலைப்பில் விமர்சன அரங்கொன்றை நடாத்தினர். அந்த அரங்கில் திசையில் வெளிவந்த சிறுகதைகளைப்பற்றி ஆற்றப்பட்ட விமர்சன உரை இங்கு சுருக்கித் தரப்படுகிறது.

இலக்கியங்கள், அவற்றைப் படிக்கும் வாசகர்களின் மனத்தைச் செம்மைப் படுத்துவனவாகவும், அவர்களைச் சரியான திசையில் சிந்திக்க வைத்து நெறிப்படுத்துவனவாகவும் அமைதல் வேண்டும். அதேவேளை அவை வெறும் போதனைகளாக அமையக் கூடாது. சுவைமிகு சம்பவங்களின் வழியாகவும், மனங்கவர் பாத்திரங்களின் வாயிலாகவும் வாசகர் மனத்தில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தி நற்பயன் நல்கவேண்டும். தனிமனித உணர்வுகள் சுவைபட வெளிப்படுத்தப் படுவதன் மூலம் அவற்றின் அடியாக சமூக உணர்வு ஏற்படுத்தப் பட வேண்டும். இலக்கியம் பற்றிய மேற்காணும் எனது கருத்துக்களுக்கு அமைய திசையில் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்ய முனைகிறேன்.

## 1. வம்சத்து வம்சம் (1-4-89)

*அல் அஸுமத்*

இக்கதை முறைகேடான பாலியல் தொடர்புகளால் ஏற்படும் அவலங்களை உணர்த்துவதோடு அவற்றின் விளைவுகள் அபத்தானவை என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது. இயற்கைக்கு மாறான பாலியல் தொடர்புகளில் நாட்டம் கொண்டோர், தம்மையும் அழித்து, பிறருக்கும் தீங்கிழைத்து, அரைகுறையாக வாழ்க்கையை முடித்துக் கொள்வதைத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார் கதாசிரியர். பலர் எடுத்துக் காட்டத் தயங்குகின்ற—ஆனால் சமூகப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற—ஓர் முக்கிய விடயத்தை மிகத் துணிகரமாகவும் நயமாகவும் கையாண்டுள்ளார். (இந்தக் கருவை மையமாகக் கொண்டு சிங்களத்தில் மலட்ட நொளன பய்மறு என்றொரு திரைப்படமும் வெளிவந்துள்ளது.) முறைகேடான பாலியல் நாட்டம் கொண்ட ஒருவன் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகி மரணித்தபின் அவனது ஆவி பேசுவது போல கதையின் போக்கு அமைகின்றது. முறைகேடான இந்தத் தீய பழக்கத்திற்கு ஆளாகுபவர்கள் அதிலிருந்து மீளமுடியாமல் தத்தளிக்கும் பான்மையும் சித்திரிக்கப்பட்டுள்ளது. மனோதத்துவ வைத்தியர்களால் அணுகப்பட வேண்டிய உளவியல் சார்ந்த இப்பிரச்சினை கதாசிரியரினால் வெற்றிகரமாகக் கையாளப் பட்டுள்ளது. ஒருவித அச்ச உணர்வைஏற்படுத்தி எடுத்துக் கொண்ட கருத்தை வாசகர் மனத்தில் ஆழப்பதித்துவெற்றி கண்டுள்ளார் ஆசிரியர்; சிறுகதைப் பண்புகளுக்குஅமைந்த சிறந்த படைப்பு இது.

## 2. கற்பு (8-4-89)

*வரதர்*

ஈழத்துச் சிறுகதைத்துறையின் முன்னோடிகளின் வரிசையில் இடம்பெறக்கூடிய வரதர் படைத்த சிறுகதை இது. இரு தசாப்தங்களின் பின் இச்சிறுகதை இப்போது மறுபிரசுரம் செய்யப்படுவதே இதன் சிறப்பைக் குறித்து நிற்கின்றது. தென்னிலங்கையில் ஒரு கோவிலின் பூசகராகப் பணிபுரியும் ஐயர் ஒருவர் இக்கதையின் முக்கிய கதாபாத்திரம். திடீரெனத் தோன்றிய இனக்கலவரத்தில் சில சிங்களவர்களால் ஐயரின் மனைவி களங்கப்படுத்தப்படுகிறாள். மனைவி களங்கப்படுத்தப் பட்டாலும், மனத்தினால் ஈடுபடாமல் நிர்ப்பந்தத்தின் நிமித்தம் ஈடுபடுத்தப்பட்டமையால் அவள் குற்றமற்றவள் என்பதை உணர்ந்து. ஐயர் அவளை ஏற்றுக் கொள்வதே கதையின் சாரம்.

''பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறு செய்யப்பட்டால் அவள் கற்பிழந்தவளாக கருதப்பட வேண்டுமா?'' என மூர்த்தி மாஸ்ரரிடம் ஐயர் கேட்கின்ற வினாவின் வாயிலாக கதாசிரியர் தனது கருத்தை முன்வைக்கின்றார். பகுத்தறிவுக்கு ஏற்புடைய இக்கருத்தை வாசகர்கள் ஏற்கத்தகு விதமாக கதாசிரியர் இக்கதையை முடித்திருக்கிறார்.

**ஆ. மகாதேவன்**

'தேசிய இனப் பிரச்சினைக் கதை' என்ற முத்திரையுடன் இச்சிறுகதை 'திசை'யில் இடம் பெற்றிருப்பினும், இக்கதையில் இனப்பிரச்சனையை வட மேற்காணும் பகுத்தறிவுக் கருத்தே முக்கியத்துவம் பெறுகின்றதெனக் கருதவேண்டியுள்ளது. இனக்கலவரம் இக்கதையின் பின்னணியாக அமைக்கப்பட்டுள்ளதே அன்றி, இத்தகைய சம்பவங்கள் எமது பிரதேசத்தில் நிகழ்வதற்கும் சந்தர்ப்பம் உண்டென்பது கருதத்தக்கது. இனப்பிரச்சனையின் பாதிப்புக்கள் கதையில் ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சிங்களவர்களில் ஒரு பிரிவினரால் செய்யப்படும் அநீதிகளை வைத்து முழு சமூகத்தையும் குறைகாண முடியாதென்பதும் மனங்கொளத்தக்கது. எதுவாயினும் இக்கதை எடுத்துக் கொண்ட கருத்தைச் சிறப்பாக வெளிப்படுத்துவதாகவும் இலக்கியப் பண்பு நிறைந்ததாகவும் அமைந்து காணப்படுகிறது.

## 3. அதிர்ஷ்டகரமான ரிக்கற் (15-4-89)

*மு. சி. சீனித்தம்பி*

அழகிய மகளிரைக் காணும்போது இளைஞரின் மனத்தில் எழுகின்ற ஒருவித இன்ப உணர்வையும் ஏக்கத்தையும் அடியாகக் கொண்டு அமைந்துள்ளது இச்சிறுகதை. பஸ்ஸில் சந்தித்த ஒரு இளம் பெண்ணைக் கண்டு அவளோடு பழகவிரும்பும் ஒரு ஆடவனின் மனவெழுச்சிகளையும், செயல்களையும் இக்கதை வர்ணிக்கிறது. ஒரு இளமனதின் உணர்வுத் துடிப்பு இக்கதையில் எடுத்துக் காட்டப்படுகிறது என்பதைத் தவிர, இக்கதையில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக எதுவுமில்லை. ரஷ்ய மொழியில் இருந்து ஆங்கிலத்தின்வழி மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளதெனினும் கதையில் 'கனதி' இல்லை.

## 4. காளிமுத்துவின் பிரஜா உரிமை (22-4 89)

*அ. செ. முருகானந்தன்*

பிரஜா உரிமை வழங்கப் படாமையால் துடிக்கும் ஒரு தொழிலாளியின்உணர்வு உந்தலாக வெளிப்படுகிறது இச்சிறுகதை. இது ஒரு தொழிலாளியின் கதைமட்டுமல்ல, ஒரு சமூகத்தின் கதை. ஒரு மக்கட் பிரிவின் கதை. தான் 'நாடற்றவனாக' இருப்பினும் தனது மகனுக்காவது இந்த மண்ணின் மைந்தன் என்ற உரிமை கிடைக்க வேண்டுமெனத் துடிக்கும் ஒரு தொழிலாளி காளிமுத்து. அவன் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்துச் செல்லும் அலுவலகங்களில் எல்லாம் அதிகாரிகள் ''சான்று'' கேட்கிறார்கள். தனது மூதாதையரின் உழைப்பின் பயனே இன்றைய செழிப்புமிக்க மலையகமும் அதன் பொருளாதார வளங்களும் - என அவன் சிந்திக்கிறான். எனினும் இவைகளைச் சான்றுகள் என அதிகாரிகள் ஏற்பார்களா?

உழைத்து உயிர்வாழும் மலையக சமூகத்திற்கு உரிமைகள் வழங்கப்படாதிருக்கும் கொடுமை கதையின் தொனிப்பொருள் ஆகின்றது. தொழிலாளியின் உள்ளத் துடிப்பு, வாசகர்களுக்கும் ஏற்படும்வகையில் உணர்ச்சி மயமாக எழுதப்பட்டுள்ளது இச்சிறுகதை.

''ஐயா, எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று வச்சிருக்கோம். எழுதிக்கொள்ளுங்கோ எஜமான்'', என்று தோட்ட சூப்ரன்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போது அங்குள்ள யாழ்ப்பாணத்து கிளார்க் துரை ''என்னடா அது? கருப்பையாவா? எப்படா ஐயாவானே?'' என்று கேட்டு பெயரையே மாற்றிச் சிறுமைப்படுத்தும் காட்சி தரப்பட்டுள்ளது. இப்பாத்திரப் படைப்பு எம்மவரைச் சிந்திக்க வைக்கக் கூடியது, எமக்கு மேலே உள்ள சமூகம் எமக்குக் கொடுமை இழைப்பதைப் பொறுக்க முடியாத நாம், எம்மைவிடப் பின்தங்கிய நிலையிலுள்ள சமூகத்திற்குக் கொடுமை புரியும் முரண்பாடு சுட்டிக்காட்டப் படுகிறது. இறுதியில் அதிகாரிகளை அழைத்து வந்து அவர்கள் முன்னிலையில் நிலத்தைத் தோண்டி ஓர் எலும்புத் துண்டையெடுத்து ''இது என் தந்தையின் எலும்பு— இதைவிட வேறு சான்று வேண்டுமா'' எனக்கேட்கும் உணர்ச்சிமயமான கட்டத்துடன் நிறைவடைகிறது கதை. இந்நாட்டின் மேம்பாட்டிற்காக உழைத்தும், உரிமையிழந்த சமுதாயமாக விளங்கும் மலையக சமூகத்தின் பிரச்சினைகளைத் துலாம்பரமாகக் காட்டும்மிகச்சிறந்தகதைஇது. கதை நகர்த்திச் செல்லப்படும் பாங்கும், சம்பவக் கோவைகளின் ஒழுங்கமைப்பும் சிறந்து விளங்குவதுடன், எடுத்துக் கொண்ட கருப்பொருளையும் வாசகர் உள்ளத்தில் சிறப்பாகப் பதித்துள்ளது இக் கதை.

## 5. நினைவுகள் (29-4-89)

*தெளிவத்தை ஜோசப்*

பாதையில் சந்தித்த சிங்கள நபர் தான் பல வருடங்களின் முன் பாடசாலையில் கூடப் படித்ததாகக் கூறி, நட்பைப்பெற்று, ரூபா 50/= ஐயும் பெற்றுக்கொண்டு சென்றுவிடுகிறார். இவர் ஏமாற்றுப் பேர்வழி என்பது பிறகுதான் தெரியவருகிறது. கதாசிரியரே கதைகூறும் பாணியில் அமைகிறது இக்கதை. இங்கு ஏமாற்றப் பட்டது பெரிய விடயமாகக் காட்டப்படவில்லை. அந்த நபர் பாடசாலைக் காலத்தின் இனிய நினைவுகளை மீட்டு, இன்ப உலகில் மிதக்க வைத்த சுகானுபவமே பெரிதாகக் காட்டப்படுகிறது.

உண்மையில் பாடசாலை வாழ்க்கையோடு இயைந்த இளமைப்பருவம் பொன்மயமானது. வாழ்வின் கவலைகள், மனச்சுமைகள் எதுவுமின்றி பள்ளித்தோழருடன் குலவி மகிழும் அக்காலம், பின்னால் நினைக்குந்தோறும் நெஞ்சில் இனிமை பயப்பது. குறித்த நபர், இளமைக் காலத்துத் தோழர்களை நினைவு படுத்தி இன்பக் களிப்பில் மூழ்க வைத்ததை கதாநாயகன் ஓர் சுவையான அனுபவமாகக்கொண்டு நிறைவடைகிறார். அந்த மகிழ்ச்சியில் ஐம்பது ரூபா இழப்புக்கூட பெரிதாகத் தோற்றவில்லை.

பாடசாலை நண்பர்களின் பாத்திரப் படைப்பும், தாவரவியல் ஆசிரியர் தோமஸ் உட்பட பிற ஆசிரியர்களின் பாத்திரப் படைப்பும் சுவையாக உள்ளன. மனத்தைக் கவரும் வகையில், கதை லாவகமாக நகர்த்திச் செல்லப்படுகிறது. ''கரு'' வைவிட இக்கதையில் ''உரு'' சிறப்பாக அமைந்துள்ளது; கதை கூறப்படும் பாணி கருத்தைக் கவர்கின்றது. □

# போல் கொக்ஸின் 'தி ஐலன்ட்' — ஓர் அறிமுகம்

**சி. ஜெயசங்கர்**

அவுஸ்திரேலியாவின் சினிமா நெறியாளர்களுள் முக்கியமானவர்களில் ஒருவரான போல் கொக்ஸ் (Paul Cox), என்பவர் இலங்கையின் அவலநிலையை தி ஐலன்ட் எனும் திரைப்படம் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார். இலங்கை உட்பட உலகு பூராவும் இத் திரைப்படம் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

பாதுகாப்புக்கருதி இலங்கையைவிட்டு வெளியேறி, கிரேக்கத்துத் தீவு ஒன்றில் வாழும் இலங்கை அரசியல்வாதி ஒருவரின் மனைவியினுடைய பாத்திரப்படைப்பினூடாக, இலங்கை நிலவரம் காட்டப்படுகிறது. இப்பாத்திரத்தையேற்று நடிப்பவர், 1987 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த நடிகைக்கான வெள்ளிமயில் விருதுபெற்ற அனோஜா வீரசிங்ஹ.

அனோஜா வீரசிங்ஹவுடன் இரு சர்வதேச நடிகைகளும் இத்திரைப்படத்தில் பங்கேற்கின்றனர். ஒருவர் கிரேக்க நடிகையான ஐறீன் பப்பாஸ். ஷொப்ரா த கிரீக், கன்ஸ் ஒவ் நவரோன் ஆகிய திரைப்படங்களில் குறிப்பிடத்தக்க பாத்திரங்களை ஏற்றுநடித்தஇவர், 'தி ஐலன்ட்' இல் யுத்தமொன்றில் தனது கணவனையும் குழந்தைகளையும் பறிகொடுத்த ஐரோப்பியப் பெண்ணாக வருகிறார். கிரேக்கத்துத் தீவில் வாழ்வின் எஞ்சிய பகுதியை பிறருக்கு உதவிபுரிவதில் அர்ப்பணித்த ஒருவராக வருகிறார்.

மற்றையவர் செக்கோஸ்லவேக்கியாவின் விருதுபெற்ற நடிகையான 'எவர் சிற்றூர்.' இவர் போதைவஸ்து கடத்தியாகப் பயன்படுத்தப்பட்டு, பின் போதைவஸ்துக்கு அடிமையாகி கிரேக்கத்துத் தீவில் மறைந்து வாழ்பவராகப் படைக்கப்பட்டிருக்கிறார்.

1988ஆம் ஆண்டின் பிற்பகுதியின்— முக்கியமாக கார்த்திகை, மார்கழி மாதங்களின் இலங்கை அரசியல் 'நிலவரங்களை வெளிக்கொணர்கிறது இத்திரைப்படம். இலங்கை அரசியல்வாதிகளுக்கு அரசியல், ஆபத்தான ஒன்றாக வெளிக்கிளம்பியுள்ளது. அவர்களது உறவினர்களின் உயிர்களிற்குக்கூட உலைவைப்பதாக அது விரிவு கண்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அவலநிலை சமூக நிலையடையும்வரை, அரசியல்வாதியொருவர் தனது மனைவியை பாதுகாப்புக்கருதி கிரேக்கத்துத் தீவுக்கு அனுப்பி வைக்கிறார். நேரிட இருக்கும் அவல நிலைகளையெண்ணி அந்நிய மண்ணில் தன்னுள் அழியும் அவல வாழ்வு நடத்தும் பாத்திரப் படைப்பு, அனோஜா ஏற்று நடித்த முக்கிய பாத்திரங்களுள் ஒன்றாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு பாலையின் குரல்

கோடை தகிக்கிறது நெடுநாளாய்
ஆழக்கிணற்றிலும் நீர் வற்றிப் போச்சு
அள்ளப் போட்ட வாளி வெறுமனே
வருகிறது
கோடை தகிக்கிறது நெடுநாளாய்.

வானில் ஒரு பொட்டுமேகம் கிடையாது
பாலை வெளியில் விரல்நீட்டி
பரிதவிக்கின்றன மொட்டை மரங்கள்
கனவுகள் உதிர்ந்த மனிதரைப்போல.

கோடை தகிக்கிறது நெடுநாளாய்.

நிழலற்று அலையும் மனிதர்கள்
இதோ, சுவடிழந்து செல்கிறார்
எனது இமைத்தெரு கடந்து.
விழிஎறியும் திசை எங்கும்
கானல் நீரள்ளி நீள்கின்ற கைகள்
ஒரு கையும் இவர்க்கென்று
உயிர்த்தண்ணி ஏந்தவில்லை.

கோடை தகிக்கிறது நெடுநாளாய்

சுற்றிலும் நெருப் பெரிவு
மானுடர்கள் தீக்குளிப்பு
பச்சையாய் உடம்புகள்,
பச்சையாய் உணர்வுகள்.
கனவுகள் பச்சையாய்
எரிகின்றன; கரிகின்றன.

கண்ணெதிரே கானலில்
இந்தப் பூமியே எரிகின்ற பிணமாகி
தீ நிழல் விழுத்த
எதிர்காலம் —
பாம்புதிர்த்துப்போன செட்டை மினுங்க
லென ......

கோடை தகிக்கிறது நெடுநாளாய்

தகிக்கிற கோடையில்
பறவையின் நிழலும் பரிதவிக்கும்
மொட்டை மரத்தடியில்
கூன் விழுந்த மானுடம் குந்தியிருக்கிறது
பூதாகரமாய் நீளுகிற பாலையின்
நெடுமுச்சாய் அலைகாற்று அதன்
ஜீவனைச் சுடுகிறது.

யாரேனும், யாரேனும்
இதயத்தைப் பிழிந்தெனினும்
உயிர்த்தண்ணி வார்க்கும் வரை,
முதுகு பிளந்தெனினும்
முள்ளெலும்பை ஊன்றுகோலாய்
வழங்கும் வரை
காத்திருக்கும்
இந்த நீண்ட நெடும் பாலை வழி.
யாரேனும் .,.. யாரேனும் .....?

— சு. வில்வரத்தினம் □

## ஒளி கொள்ளல்

கொடூர இருள்
இருட் குகையினுள்
குருட்டாட்டம் தினம் நடக்கும்.
அதூசைப் புழுவென
மனமது நெளிய
முக(ம்) மூடிமாட்டி நடிக்கும்.
என்ரை, உன்ரை
பணம், பதவி, போட்டி
கடைசியில் ...........
குறிகளில் கவிழ்த்த
பார்வையை நிமிர்த்து
வெறும் சதைப்பிண்டமா மனிதன்.
எத்தனை யுகங்களாய்
இருட்டில் அழுந்திக் கிடப்பது?
போதும்.
எழுந்து வா.
இருளை உழக்கி
ஒளியினை எமதாக்குவோம்!

— அசோக் □

# "நாங்கள் பொய் சொல்லவில்லை"

சுவர் ஓவியங்கள் மற்றும் திரை ஓவியங்களைத் தீட்டும் ஓவியரும் சோவியத் ஓவியர் சங்க போர்டின் தலைவருமாகிய ஆந்திரேய் வஸ்நெத்சோவுடன் ஒரு பேட்டி

**கேள்வி:** உலகில் ஓர் ஓவியரின் இடம் என்ன? கலையில் பத்திரிகைத் துறையை நீங்கள் எதிர்க்கிறீர்களா?

**பதில்:** நான் பத்திரிகைத் துறையில் ஆர்வம் கொண்டிருந்த போதிலும், தகவல் சாதனங்கள் இன்று மிகவும் கடுமையான பிரச்சினைகளை கவனத்திற்குக்கொண்டுவருவதை ஒத்துக்கொண்ட போதிலும், நுண்கலைகளுக்குப் பத்திரிகைத் துறைப்பாணி நல்லதென்று நான் நினைக்கவில்லை. சுவரொட்டிகளுக்கும் கேலிச் சித்திரங்களுக்கும் மட்டுமே அது நல்லது. ஏனைய ஓவியங்கள் பத்திரிகைத் துறைப் படைப்புக்களாகாமல் கலைப்படைப்புகளாவதில்லை. ஒரு பத்திரிகையாளரைப்போன்று, ஓர் ஓவியரால் முக்கிய பிரச்சினைகளுக்கு பதிலளிக்க முடியாது. நான் எப்போதும் அவ்வாறு செய்ய முயன்றதில்லை.

**கேள்வி:** ஆனால், ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளின் துவக்கத்திலும் உங்களுடைய ஓவியங்கள் (உதாரணமாக, ஒரு காலியான அறையில், மேசையின் மேல் தனக்கு முன்னால் ஒரு துண்டு ரொட்டியைத் தவிர வேறொன்றுமில்லாத ஒரு மனிதனின் காலை உணவு என்ற ஓவியம்) கூர்மையான சமூக விமர்சனத்தைக் கொண்ட அரசியல் படைப்புக்கள் என்று கருதப்பட்டனவே.

**பதில்:** நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, எனக்கு எத்தகைய அரசியல் உள்நோக்கமும் இருக்கவில்லை. மிகவும் வழக்கமான விஷயங்கள் பற்றிய ஓர் அசைவற்ற - வாழ்க்கையை ஓவியமாகத் தீட்ட நான் விரும்பினேன், அவ்வளவுதான். அன்றைய நிலைமையின் பாதிப்பு என்மீது ஏற்பட்டிருந்தது மெய்யே, ஆனால் அது தானாக ஏற்படும் என் உள்ளுணர்வு மட்டுமேயாகும். என்னுடைய ஓவியங்களை இந்த நாட்டிலுள்ள நிலைமையுடன் தொடர்புபடுத்துவதற்கு நான் எப்போதும் முயன்றதில்லை.

**கேள்வி:** ஆனால் யுத்தப் பிற்காலக் கலையில் பயன்படுத்தப்பட்ட கலித்துப்போன பத்தாம் பசலிகளைப் போக்க வேண்டுமென்று நீங்கள் முயலவில்லையா?

**பதில்:** என் வழியில் மிகவும் தடங்கலாக இருந்த பள்ளிக்கூட வறட்டுக் கோட்பாடுகளைக் கழித்துக் கட்டுவதற்கு நான் முயன்றேன். எதார்த்த நிலைமைக்கு ஏற்ப ஓவியம் தீட்டுவதற்கு நான் விரும்பினேன். நான் ஒருபோதும், குறிப்பாக, என்னுடைய ஆரம்பகாலப் படைப்புகளில் பரபரப்பான எதையும் புனைந்துருவாக்கவில்லை; கடுமையான பிரச்சினைகளை எப்பொழுதும் எடுத்துக் கொள்ளவில்லை. என்னுடைய சிந்தனைகளையும், உணர்வுகளையும் மட்டுமே வெளிப்படுத்தினேன். ஓர் ஓவியருக்கு இதுதான் மிகவும் கடினமான விஷயமாகும். நான் வலதுசாரியோ, இடதுசாரியோ அல்லது வேறெந்தக் குழுவையும் சேர்ந்தவனல்ல. கான்சரோவ், தெய்னீகா என்ற மிகச்சிறந்த ஆசிரியர்கள் எனக்கு இருந்தனர். ஃபேவர்ஸ்கி என்னுடைய ஆசிரியர் அல்லாவிட்டாலும், அவருடைய வட்டத்துடன் நான் தொடர்பு கொண்டிருந்தேன்.

**கேள்வி:** அந்தக் காலமும் அதனுடைய படைப்பாக்கச் சூழலும் இப்பொழுது இல்லையென்று நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** ஓரளவுக்குத்தான். ஐம்பதாம் ஆண்டுகளில் தமது படைப்புகளைக் காட்சிக்குவைத்த இளம் ஓவியர்கள் உண்மையைத் தேட முயன்றனர் என்று நான் கருதுகிறேன். எங்களிடையே பல பிரிவினர் இருந்தபோதிலும் நாங்கள் பொய் சொல்லவில்லை. உண்மைதான்—இன்று அது மிகவும் பிரபல்யமடையாவிட்டாலும் — கலையில் மிகவும் முக்கியமான விஷயமாகும். எல்லோரும் 'ஏதாவது' அசாதாரணமானதைச் செய்து பொதுமக்களின் கவனத்தைக் கவர்வதற்கு முயல்கின்றனர். நமது காலத்தில், நாம் பகட்டாகக் காட்டிக் கொள்வதற்கு முயலவில்லை. நாம் அனைவரும் ஒவ்வொருவரும் அவருடைய சொந்த வழியில் உண்மையைக் கடைப்பிடித்தோம். அன்றாட விஷயங்களைப்பற்றி நான் தொடங்கினேன்— பெண்கள், துவைத்த துணிகளைக் கொடியில் காயவைப்பது, ஒரு பத்திரிகையின் மீது ஒரு கோழிக்குஞ்சு அமர்ந்திருப்பது, அல்லது சாதாரண மக்கள் பேசிக்கொண்டிருப்பது முதலியன— மொஸ்கோ வாசிகளால் நான் மிகவும் கவரப்பட்டேன்.

கலையில் மெய்மையானது, ஓர் எதார்த்த பூர்வமான பார்வையுடனும், கலை நயத்துடனும், வடிவத்தின் மெய்மையுடனும் பிரிக்க முடியாமல் இணைந்துள்ளது. ஓர் ஓவியமானது, ஓர் உருவப்படமும்கூட, வாழ்க்கைக்கு மெய்ப்பாடானதாக இருந்தால் மட்டுமே எதார்த்த பூர்வமானதாக இருக்கும்.

நாம் — ஓவியர்களும், கலையை நேசிப்பவர்களும் ஒருசேர, கண்களைத் திறந்து கொண்டிருக்க வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள பல விஷயங்களை நாம் பார்க்கத் தவறுகிறோம். அதனால் நம் சொந்த வாழ்க்கையையே வெறுமையாக்கிக் கொள்கிறோம்.

**கேள்வி:** 'நவீன ஓவிய'க் கலையில் முக்கிய பிரச்சினை என்ன?

**பதில்:** லட்சியநோக்கு இழக்கப்படுகிறது. கலாசாரத் துறையில் பயனீட்டு நோக்கு ஏற்பட்டுள்ளது.

கலாசாரமும் கலையும் ஆன்மீக விஷயங்களாகும், உலகம் முழுமையிலும் பயனீட்டுக் கண்ணோட்டத்தினால் அவை பாதிப்படைந்துள்ளன. இது சுற்றுச் சூழல் அரிமானம் போன்றதாகும். கலாசாரத்தையும் கலையையும் பயனீட்டுப் பண்டங்களாக மாற்றும் நடைமுறை ஒரு நெருக்கடிக்கு இட்டுச் செல்லும், மானிடர்களின் ஆன்மீகக் கோட்பாடுகளை ஒழித்துவிடும்.

கலாசாரத்திற்கு உதவி தேவை. ஆட்சி நிர்வாக உத்தரவுகளின் கீழ் அதுபெரும் இழப்புகளை அடைந்துள்ளது. இவை எஞ்சியுள்ள சிறந்த மரபுகளையும் அழித்தொழித்து, அவை மறுமலர்ச்சியுறுவதைத் தடுக்கக் கூடும்.

ஓர் ஓவியருக்கு அவரது படைப்புக்காக அரசும் தனிநபர்களும் ஊதியம் அளிக்க வேண்டும்.

இது வர்த்தகமல்ல. ஓர் ஓவியத்திற்கு ஒரு மதிப்பை அளிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதை— கலையில் வர்த்தகம் நடைபெறுவதை —நான் புரிந்து கொள்கிறேன். இது அந்தப் படைப்பின் தரத்தைச் சார்ந்திருக்க வில்லை. வர்த்தகத்தினால் ஒன்றுமில்லாததைப் பெரிதாக்கவும், பெரிய விஷயத்தை அற்பமாக்கவும் முடியும்.

**கேள்வி:** ஓவியரின் குறிக்கோள்கள் என்ன?

**பதில்:** முதலாவதாக, நமது குறிக்கோள்கள் சம்பந்தமாக நாம் ஒன்று படுவதற்கு முயல வேண்டும். "மெய்ப்பாடு" என்ற சொல்லை அப்படியே நீடித்து வைத்துக் கொள்ள நான் விரும்புகிறேன். கலையில் உண்மையும் மெய்ப்பாடும் அழகியல் கருத்தினங்களோ அல்லது பாணி சம்பந்தப்பட்ட வறட்டுக் கோட்பாடுகளோ அல்ல. எதார்த்தப் போக்கானது ஓர் உலகக் கண்ணோட்டம், ஓர் ஓவியரின் தத்துவவியல் ஆகும். எதார்த்தப் போக்கை இயற்கைவாதம் எதிர்க்கிறது—இயற்கை வாதமானது ஒரு போலியான தத்துவவியலாகும். ஒழுக்கக்கேடு, வன்முறையை வழிபடுவது, ஆன்மிக மதிப்புகளின் அழிவு ஆகியவற்றை நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

இரண்டாவதாக, நாம் போட்டியிடுவதற்கு முயல வேண்டும். வெவ்வேறு ஓவியர்களின், வெவ்வேறு பாணி ஓவியர்களின் கண்காட்சிகளை நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இளம் ஓவியர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

சோவியத் ஓவியக் கலையின் ஓர் உண்மையான வரலாறு தேவை.

நான் இன்னும் நன்னம்பிக்கையாளனாகவே இருக்கிறேன். வாழ்க்கையை, உள்ளது உள்ளவாறே நாம் காண வேண்டும். லட்சிய நோக்கை ஒருபோதும் கைவிடக்கூடாது.

நன்றி: சோவியத் பலகணி □

# திசையின் குறுநாவல்

## 7

பாதர் எசக்கியைக் கண்டு செவுத்தியிடம் தான் போகவேண்டும் என்பதைச் சொன்னபோது எசக்கி தானே செவுத்தியைக் கூட்டிக் கொண்டு வருவதாகச் சொன்னான்.

''இல்லை. நான்தான் அவனிடம் போகவேண்டும்'' பாதர் மறுத்தார்.

பாதர் எசக்கி வழிகாட்ட செவுத்தியின் இருப்பிடத்தை அடைந்தபோது மாலை ஐந்தரை இருக்கும்.

பெரிய வீதியிலிருந்து கிளையாக ஒரு சின்ன வீதி புறப்பட்டு அது எங்கேயோ போக சின்ன வீதிக்குக் கிளையாக ஒரு சந்து நீண்டு, சேறும் சகதியும் நிறைந்தவொரு இடத்தில் முடிந்தது. தகரமும், மரமும், மண்ணும் கலந்தபொந்து. தனித்ததல்ல. ஒருமித்த பொந்துகளின் இடையில் அடைந்துபோன தொன்று. எதிரும், புதிருமாகவும் அக்கம் பக்கமாகவும் பொந்துகள்.

மனித சீவியம் எவ்வாறு இருக்க முடியாதென்றும், இருக்கக் கூடாதென்றும் பல மேதாவிகளும் நினைத்தும், வற்புறுத்தியும் இருக்கிறார்களோ அது இங்கே இந்தப் பொந்துகளில் இருக்கிறது. சேற்றில் புரள்கிற நாய்களும், அவற்றுடன் விளையாடித் திரிகிற சிறுவர்களும், சொற்களை விசி அவற்றின் உரசலில் தங்களை இழக்கிற பெண்களும், நீரிலும், புகையிலும் அமிழ்ந்து போன ஆண்களும், அழுக்கான அழுக்கும் ........ கர்த்தரே! இது நரகமாகத்தான் இருக்க வேண்டும். இது கொழும்பு மா நகரத்திலே தான் இருக்கிறதா?

பாதரைக் கண்டதும் அந்த இடத்தின் இயக்கம் முழுவதும் ஒரு நொடி ஸ்தம்பித்துப் பிறகு மந்த கதியில் நடக்கத் தொடங்கியது.

எசக்கி பாதருக்குப் பின்னால் தானே செவுத்தியைக் கூட்டி வந்திருப்பானென்றும், பாதர் அங்கு வந்திருக்கத் தேவையில்லையென்றும் சொன்னபடி வந்து கொண்டிருந்தான்.

ஒரு பொந்திலிருந்து சிறு குழந்தையொன்றின் அழுகுரல் உரக்கவே கேட்டது.

'கர்த்தரே! இங்கே பிறக்கிற குழந்தை என்ன பாவத்தை எங்கே செய்திருந்து இந்த நரகத்தில் பிறந்திருக்க வேண்டும்? உம்மை அடைவதற்காகவல்லோ?'

பாதரின் சிந்தனை திடீரென்று வந்த பலத்த குரல்களின் வீச்சினால் தடைப்பட்டது.

செவுத்திக்கும், அலிசுக்கும் பெரிய வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அழகான சொற் தொகுப்புகளில், மனித உறுப்புகள், செய்கைகளின் வெவ்வேறு பெயர்களும் வந்து கொண்டிருந்தன. அலிசுக்கு பாதர் வீட்டு முற்றத்தில் செவுத்தி விழுந்துபோனது தெரியவந்து ........ அதுதான் மூழுப்பிரச்சனையும்.

அலிசுக்கும் பாதரின் யோசனை விளைவுகளைத் தீர்மானிக்க முடியும். கரீமுக்கு பாதரிடம் உள்ள பயங்கள் அவ்வளவும் அலிசுக்கும் உண்டு. பாதருக்கு இந்த விஷயங்களைப்பற்றி என்ன தெரியும்? ஆனால் விவாதம் எங்கேயோ இதற்கப்பால் வெகு தூரத்தில் நின்றது.

''நீ ஏன் பாதர் வீட்டு முற்றத்தில் விழுந்தாய்?'' என்பது அலிசின் கேள்வி.



செவுத்தி பலவிதமாகவும் அந்தக் கேள்வியைச் சுற்றிப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

''நீ யார் கேட்பதற்கு?''

''நான் எங்கேயும் விழுவேன்''.

''நீயா காசு தருகிறாய்?''

''நீயார் கேட்பதற்கு''... 'நீ யார் கேட்பதற்கு?' என்பதை செவுத்தி சொற்தோரணைகளுடன் அலிசைக் கேட்டுக்கொண்டிருந்த போது பாதர் போய்ச் சேர்ந்திருந்தார்.

''நீ யாரி கேட்பதற்கு?''




பாதர் போய்ச் சேர்ந்த போது ஏற்பட்ட மௌனத்துக்குச் சற்று முன்னோடியாக இந்த எதிரொலி அதிர்ந்து அந்த மௌனம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

பாதர் தன்னைச் சுதாரித்துக்கொள்ள முயன்றார். ''செவுத்தியான்'' என்று மெல்ல அழைத்தார் பாதர்

''அவள் உன் மனைவி''.

செவுத்தியான் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் நின்றான்.

அலிஸ் ''அதைச் சொல்லுங்க பாதர்'' என்று தொடங்கி செவுத்தி பற்றிய தன் குறைகள் எலலாவற்றையும் ஒவ்வொன்றாகச் சொல்லத் தொடங்கினாள்.

பாதருக்கு அவள் பேசப் பேச ஒன்று தெளிவாகப் புரிந்தது. செவுத்திக்கும் அவனைச் சுற்றியுள்ள உலகிற்குமான தொடர்பில் ஒரு விரிசலமைந்துபோயிருக்கிறது. தன்னந்தனியனாகவே சீவியத்தை வாழ்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டிருக்கிறான். எவ்வளவு தூரம் இப்படி வாழ்ந்துவிட முடியும்?

கர்த்தரே! இப்படிந் தனித்துப் போனவன் எப்படி உம்மில் நம்பிக்கை வைக்க முடியும்? இவன் உள்ளத்தில் நீர் தான் ஒளி ஏற்ற வேண்டும்! இவன் தன் மகன் விஜிதவைத் தன்னிடம் கூட்டி வருவான் என்று நம்பியது எவ்வளவு முட்டாள் தனமானது!

பாதர் அலிசிற்கும், செவுத்தியானுக்கும் பின்னணியாக அமைந்து போன சேற்றையும், சகதியையும், எந்த ஒழுங்குக்கும் அமைய வராத சேரிக் கட்டிடங்களையும், டயர்களையும், கற்களையும், குறுக்கும் நெடுக்குமாக ஓடுகின்ற நாய்களையும், முழு மனிதர்களையும், நிர்வாணச் சிறுவர்களையும், அவர்களின் இரைச்சலையும், அந்தச் சூழல் பரப்பிக் கொண்டிருந்த நெடியையும் புலன் நுகர்ந்தபோது அவருக்குள்ளே ஒரு தீர்மானம் எழுந்தது. இவர்களுக்காக் ஏசுவிடம் பிரார்த்திப்பதே என்றால் கூடுமானது. நான் இவற்றில் ஈடுபடமுடியாது. நான் உடனே திரும்புவதுதான் உசிதமானது. இதைத் தானே ஏசு தன் அப்போஸ்தலர்களை மக்களிடம் நோய்தீர்க்க அனுப்பிய போது சொலலியிருக்கிறார்.

'மக்கள் நீங்கள் சொல்வதைக் கேட்க மாட்டார்களாயின் உடனே திரும்புங்கள்'

பாதர் புத்திமதிகளைக் கூறி ஏசுவிடம் அவர்களை வந்து பிரார்த்திக்கும்படி கேட்டுக் குறியிட்டுக் கொண்டு திரும்பினர். அவருக்கு வருத்தமாக இருந்தது.

அலிசும் பாதர் திரும்பியவுடன் செவுத்தியைப் பிறகு கவனித்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டு அந்தோனியார் தேவாலயத்துக்கு இரண்டு பெரிய மெழுகுவர்த்திகளுடன் போய் முழந்தாளிட்டுக் கொண்டாள்.

''கடவுளே! விஜிதவுக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டும். அவன் இந்த இக்கட்டிலிருந்து தப்புவானாயின் கடவுளே! உனக்கு இன்னும் இரண்டு மெழுகுவர்த்தி கொளுத்தி வைக்கிறேன். அவனைக் காப்பாற்று.''

அவள் பிரார்த்தனை முடிந்து திரும்பிய போது பாதர் அவளைக் கண்டார்.

'ஏசுவே! என் பிரார்த்தனை பலித்து விட்டதா?'

பாதரின் மனத்தில் ஒரு சிறு நம்பிக்கை பிறந்தது. அதை ஒட்டியே அவநம்பிக்கையும் பிறந்தது. 'இவள் பிரார்த்தனை அவள் மகன் வரும் வரைக்குந் தான்; அதற்குப் பிறகு இவள் உம்மிடம் வருவாளா பார்ப்போம்'.

தனக்காகக் காத்து நிற்கிற மக்களைக் காண பாதர் திரும்பினர்.

## 8

கெம்பா ஸ்தாபனம், கெம்பா எவ்வளவு தான் தீரனாக இருந்தாலும் தனித்ததல்ல. அதற்கெதிரான ஸ்தாபனங்களும், நட்புறவு அவ்வப்போது கொள்கிற ஸ்தாபனங்களும் உண்டு. ஸ்தாபனங்களுக்கிடையே ஒரு வகை உணர்வுப் புலம் இயங்குகிறது. ஒருவன் கத்தியில் கை வைத்தால், மற்றவன் கை தானாகவே அவன் கத்தியைத் தொடுவது, பொது எதிரியைக் கண்டால் ஆளுக்காள் சமிக்ஞை செய்து கொண்டு காற்றோடு காற்றாகப் போய்விடுவது....... அரவணைத்துக் கொள்கிற போது வலிந்து அரவணைத்துக் கொள்வது ..... நம்பிக்கை கொள்கிறபோது அவநம்பிக்கையை அடித்தளமாகக் கொள்வது ..... செய்வதை வலிந்தே செய்வது .. எதையும் எதிர் நோக்கி நடப்பது இவைகள் இவ்வுணர்வுப் புலத்தின் வெளித் தோற்றப்பாடுகள்.

கெம்பா ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளில் உயிரிழந்து போன முதலாளியின் சொந்தக்காரர்கள் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதென்று, கெம்பா ஸ்தாபனத்துக் கெதிரான ஒரு ஸ்தாபனத்திடம் அவற்றை விட்டிருந்தார்கள். விஜிதவை அவர்களும் தேட ஆரம்பித்திருந்தார்கள். கெம்பா பொதுவில் இது மாதிரியான எதிர் நடவடிக்கைகளையும் எதிர்பார்த்தே இயங்குவது உண்டு. விஜிதவைப் பொலிஸ் தேட முயற்சித்த போதே எங்கோ ஓர் எதிர் விசை இயங்க ஆரம்பித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டான். விஜிதவை மாத்தறைக்கு அனுப்பி அங்கே அவன் போன ஒரு வாரத்துக்குள் அவனை வெகு ரகசியமாகக் கொழும்பிற்குத் திரும்பவும் அழைத்துக் கொண்டான். மாத்தறையில் எதிரி விஜிதவைத் தேடுவான் என்பது அவனுக்குத் தெரியும்.

விஜிதவைக் காப்பாற்றுவதென்பது இலகுவானதல்ல. காவல் வைக்கவும் முடியாது. காவலாட்கள் நடமாடுவது தெரிந்தாலே ஆள் பதுங்கியிருக்கிறான் என்பது தெரிந்து போகும். இதனால் கெம்பா காவலாட்களை வேறோரிடத்தில் நடமாடச் செய்து எதிரியைக் குழப்பிக் கொண்டிருந்தான்.

விஜித கொழும்பில் அலிசுக்கும் செவுத்திக்கும் தெரியாத, அவர்களால் தேட முடியாத ஒரு பொந்தில் தலைமறைவாக இருந்தான். சில நாட்கள் மாத்திரம் தலை மறைவாக இருந்த இடத்து அழுகிகள் அலுத்துப் போன போது — தமையனையும் தாயையும் பார்த்துவிட்டு வருவோமென்று தீர்மானித்தான். தலைவன் கெம்பாவின் கட்டளைகள் தீர்க்கமானவை. அவன் கட்டளையை மீறினால் .....

அதனால் தொந்தரவுகள் உண்டு. விஜிதவுக்கு எதையும் மீறுவதே பழக்கமானது. விஜிதவுக்கு வாழ்க்கை பாரமானதல்ல. ஒவ்வொரு மூச்சையும் 'வாழ்வு! வாழ்வு! வாழ்வு!' என்று இன்புற்று நுகர்ந்தும், விதிர்த்தும் ஆனந்திக்கிற பொய்மையும் இல்லை. வாழ்க்கை என்பது வாழ்ந்து கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனவே வேறெதுவும் முக்கியமானதல்ல. விஜித வாழ்ந்து கொண்டிருந்தான், இதில் சலனம் ஏற்பட்டுப் போனது.

நேரப் பாதையின் நெடுந்தூரத்தின் சிறு புள்ளி ஒன்றில் கெம்பாவுக்கு எதிரான 'எதிரி ஸ்தாபனம்' விஜிதவை, அவன் தன் தாயைத் தேடிப் போன நேரத்தில் மிக வசதியான ஒரு சந்தில் கண்டு கொள்ள...

விஜித தன் தற்காப்புப் போரைத் தொடங்க .....

(தொடரும்) □

## அறிவியல் உலகம்

# ஓசோன் கவசம் உடைகிறது

சூரியனில் இருந்து பூமியை நோக்கி பலவகையான ஒளிக்கதிர்கள் வருகின்றன. அவற்றில் ஒரு வகையானவதே புற ஊதாக் கதிராகும். இக்கதிரானது மனித உடலில் படும்போது எரிவுத்தன்மையை ஏற்படுத்துவதோடு, தோல் புற்று நோயையும் உண்டு பண்ணி, உடலில் உள்ள உயிர் அணுக்களை அழித்துவிடுகின்றன. இது ஒரு தலைமுறையோடு நின்ருல் மட்டும் பரவாயில்லை பலதலைமுறைகளை நாசமாக்கிவிடுகின்றன. (இதற்கு உதாரணமாக யப்பானின் கிரோசிமா நாகசாகியில் நடைபெற்ற அணுகுண்டுத் தாக்குதலால் இன்று பிறக்கும் உயிரினங்களும் ஊனத்துடன் பிறப்பதைக் காண முடிகிறது). இந்த ஊதாக் கதிர்கள் செடி. கொடி அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் உடையது, ஆனல் அவை நேரடியாக பூமியை அண்மிப்பது அவ்வளவு சாத்தியமானதல்ல. அக்கதிரை பூமிக்கு வராமல் தடுப்பது காற்று மண்டலத்தில் காணப்படும் ''ஓசோன்'' என்னும் வாயுக் கவசமாகும். இவை ஊதாக்கதிர்களை உறிஞ்சி அவை பூமியை அண்மித்து விடாமல் தடுக்கின்றன.

இந்த ஓசோன் படையானது மூன்று ஒக்சிசன் அணுக்கொண்ட ஒரு மூலக்கூருகும். இம்மூலக் கூறுகளை உள்ளடக்கியபடையானது (Layer) பூமியின் கவசம் என்பதைவிட உயிரினங்களின் கவசம் என்றே கூற வேண்டும்.

வளிமண்டலத்தில் காணப்படும் ஒக்சிசன் மூலக் கூறுகள் சூரிய வெப்பத்தால் சிதைவடைகின்றன, பின் அவை பல தாக்கங்கட்கு உட்பட்டு வேதியியல் சக்தியாக மாறி, அகச்சிவப்புக் கதிரை வெளியேற்றி ஓசோன் கவசமாகி உருப்பெறுகிறது. ஆனல் வெளியேறும் அகச்சிவப்புக் கதிர்கள் கேடு விளைவிக்கக் கூடியவை அல்ல.

இவ்வாறு தோற்றம் பெற்ற ஓசோன் படை புற ஊதாக் கதிர்களினல் தாக்கப்படும்போது, அக்கதிர்களை ஓசோன் படை உறிஞ்சுகின்றது. இதனல் ஓசோனில் உள்ள மூலக் கூறுகள் பிரிவடைகின்றன. அப்போது ஒக்சிசன் மூலக்கூறுகளும், ஒக்சிசன் அணுக்களும் மீண்டும் தோற்றம் பெறுகின்றன. இவ்வாறு மாறிமாறி அழிந்து, பிறந்து புற ஊதாக் கதிர்களை பூமிக்கு வரவிடாமல் தன்னகத்தே அடக்கும் சிறப்பம்சம் உடையது இந்த ஓசோன் கவசமாகும். இந்த ஓசோன் படை விரிவாகுவதும் பிரிவடைவதும் ஒரு இயற்கைத் தொடர் நிகழ்ச்சியாகும், இத்தொடர் நிகழ்ச்சியே ஓசோன் படையை உருவாக்கின. உருவாக்குகின்றன. இருந்தாலும் இம்மூலக் கூறுகளைக் கொண்ட ஓசோன் கவசமானது நலிவடைந்து கொண்டே போகின்றது. இந்நலிவிற்கு இயற்கையும் செயற்கையும் காரணமாக அமைந்து விடுகின்றன. காற்று மண்டலத்தில் காணப்படும் ஒக்சிசன் அணுக்கள், ஒக்சிசன் மூலக் கூறுகளோடு தாக்கமுறுதல் இயற்கை நலிவாகும்.

ஆனல் செயற்கை நலிவானது இந்த இயற்கை அழிவை மிஞ்சிவிடும் போல் இருக்கிறது. இது உயரத்தில் பறக்கும் விமானங்கள், விண்கலங்கள், செயற்கை கோள்கள், அணுக்குண்டுகள் போன்றவை ஏற்படுத்தும் அழிவுகளாகும். இவையெல்லாம் அறிவியலின் சாதனங்கள் என்பதனை மறுத்துரைக்க முடியாது. மறுதலையாக இவையே ஓசோன் கவசத்தை அழித்து விடுகின்றன.

இன்று உலகின் பல பாகங்களிலும் அணுகுண்டுச் சோதனைகளும், அணுகுண்டுத் தாக்கங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. இவற்ருல் வெளியேறும் கதிரியக்கம் கொண்ட மூலகங்களும், அவற்றின் துகள்களும் காற்று மண்டலத்துடன்கலந்து அவற்றை நிரப்புகின்றன. இவ்வாறே விமானங்கள் கக்குகின்ற புகைகளும் வளிமண்டலத்தை மாசு படுத்துகின்றன.

**சரா. புவனேஸ்வரன்**

இவை அனைத்தும் காற்று மண்டலத்தை அசுத்தமாக்கும் கழிவுகளாகும். இக்கழிவுகளில் பல தீய வாயுக்கள் உள்ளன. இவை ஓசோன் படையை அழிக்கின்றன.

நைதரசு ஒக்சைட்டு (NO) ஓசோன்களை அழித்து வேறுபல மூலக் கூறுகளை உண்டாக்குகின்றது. இவ்வாருன செயன்முறைகளும் ஓசோன் கவசத்தை நலிவடையச் செய்கின்றன. இவற்றுக்கு அடிப்படைக் காரணங்கள் விண்ணில் திரியும் செயற்கைப் பொருட்களாகும்.

இதைவிட காற்று மண்டலத்தில் கலக்கும் மற்றுமொரு பொருள் குளோரேரு புளுரோமீதேன் ஆகும். இதுவும் செயற்கை நலிவினை ஏற்படுத்தும் கழிவுப் பொருளாகும். இவ்வாயுவை ஒளிக்கதிர்கள் தாக்குகின்றபோது குளோரின் அணுத்தோற்றுகின்றது. இக்குளோறின் அணுவானது ஓசோனேடு சேர்வதால் ஓசோன் படை நலிவடைகின்றது. இதனைக் கீழ்வருமாறு விளக்கலாம்

$$Cl + O^3 \rightarrow CLO + O^2$$

Cl - குளோறின் அணு

Clo - குளோறின் ஒக்சைட்டு.

இவ்வாறு நைதரஸ் ஒக்சைட்டும் குளோரரோ புளுரோமீதேனும் காற்று மண்டலத்தில் கலந்து செயற்கை நலிவை உண்டுபண்ணுகின்றன. இவையெல்லாம் சேர்ந்து மொத்தத்தில் உயிரினங்களின் ஓசோன் கவசத்தை உடைத்தெறிய நிற்கின்றன. அண்மையில் தென்னமெரிக்காவில் தோல்புற்று நோய் உண்டாவதற்கான அறிகுறி தென்படுவதாக பத்திரிகைவாயிலாக அறிந்தோம். அதுவும் ஓசோன் இல்லாத பகுதியூடாகவந்த ஊதாக்கதிர்களின் நாசச்செயலே.

இவ்வாருன அழிவுகளில் இருந்து தப்பித்துவிட அனைவரும் சிந்தித்து ஒன்றுபட வேண்டும். இல்லையேல் புற ஊதாக் கதிர்களின் கொடூரத் தாக்குதலில் இருந்து உயிரினங்களை மீட்கவே முடியாமல் போய்விடும். □

## சிந்தனை மேடை

# பாடசாலை 'வாழ்க்கை ஆயத்தம்' செய்யுமிடம் எனவே, அதனைப் புறக்கணிக்கக் கூடாது!

கட்டுரையாசிரியர் 'சித்தார்த்தன்' தற்போது நிலவும் கல்விப் போக்கினையும் மாணவர் மனப்பான்மையையும் ஒழுங்குபடுத்தி அழகுபடக்கூறியுள்ளமை பாராட்டற்குரியது. ஆனல் அவை ஏற்றுக் கொள்ளத்தக்கனவா என்பது முற்றிலும் வேறுபட்ட விடயம்.

பாடசாலை என்ற அமைப்பு தோல்வியடைந்து வருகிறது என்று முதலில் கூறப்பட்டுள்ளது. அண்மைக் கால நிகழ்வுகளைப் பார்க்கும்போது அது ஓரளவு உண்மையென்றே ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக உயர்வகுப்பு மாணவர்களின் பாடசாலை வரவு வீழ்ச்சியடைந்து கொண்டே செல்கிறது. மாணவர் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவைப்படும் நிபந்தனையைப் பூர்த்தி செய்ய அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் இடாப்பில் தமது பெயர் இருக்குமாறு பார்த்துக்கொள்கின்றனர். காலப்போக்கில் குறிப்பாக 12 ஆம் வகுப்பில் (13 ஆம் ஆண்டில்) பெரும்பான்மையான மாணவர்கள் பாடசாலைக்கு வருவது குறைந்து வருகிறது. இதற்கான காரணம் என்ன?

திசையின் 6—5—1989 இதழில் வெளியாகிய எனது கட்டுரையில், ''பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவது, அதன் மூலம் அதிக பணவருவாய் தரும் தொழிலைப்பெற்று சுகபோக வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பதுவே நம் கல்வியின் நோக்கமாகத் தற்போது இருந்து வருகிறது. இதனல் பரீட்சைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனல் பல குழறுபடிகள் ஏற்படுகின்றன'' என்று குறித்துள்ளேன். இங்கு நாம் சிறிது நின்று சிந்திக்க வேண்டும். இந்தக் ''குழறுபடிகள்'' என்ன? நமது எதிர்காலச் சுகபோக வாழ்விற்காக இப்போது பரீட்சையில் திறமையாகச் சித்தியடைய வேண்டும். எனவே எவ்வகை

**□□ சுமந்திரன் □□**

யான வழிமுறைகளைக்கையாண்டும் அதனை அடைய நாம் முயல்கின்றோம். அச்சந்தர்ப்பத்தில் மானிடப் பெறுமானங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. நமது குறிக்கோளையடையத் தடையாக விருக்கும் எல்லாமே புறக்கணிக்கப்படுகின்றன அல்லது தூக்கியெறியப்படுகின்றன. இங்கு எவற்றையும் நாம் பவித்திரமானவையாகக் கொள்வதில்லை. இந்தப் போக்கே இப்போது தலைதூக்கி நிற்கிறது.

மாணவர்களை உன்னதமான வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதே கல்வியின் பணி. இந்த வாழ்க்கை ஆயத்தம் என்பது சமூகத்தின் பண்பாடு, சமய நம்பிக்கைகள் போன்ற வாழ்வோடு சம்பந்தப்பட்ட பெறுமானங்கள், அவற்றில் சமூகத்தினர் வைத்திருக்கும் விசுவாசமான ஈடுபாடு, அதற்கான அர்ப்பணிப்பு உணர்வு என்பவற்றைப் பொறுத்துள்ளது.

வாழ்க்கை என்பது பல அம்சங்களைக் கொண்டுள்ளது. எனவே அவற்றைக் கூடியவளவு பிரதிபலிப்பதாகப் பாடசாலை அமையவேண்டியுள்ளது. ஒரு முன்மாதிரிச் சமூகமாகப் பாடசாலை விளங்க வேண்டும். உன்னதத்தை எதிர்காலத்தில் உருவாக்க அது இப்போழுதே, இக்கணமே வாழப்படவேண்டும். அது மாணவனின் வாழ்க்கை அனுபவம் அல்லது இயல்பு ஆகவேண்டும். மாணவப்பருவத்திலுள்ள மனிதர்கள் இப்போதும் வாழவேண்டும்; எதிர்காலத்திலும் வாழவேண்டும். இப்போது அவர்களை நெறிப்படுத்தி வாழவைப்பதின்மூலமே எதிர்கால வாழ்வை ஓரளவாவது உறுதிப்படுத்தலாம். அதற்கு பாடசாலைச் சமூகத்தின் முதியவர்களான அதிபர், ஆசிரியர்கள் போன்ருேரின் வாழ்க்கை முன் மாதிரியாக அமைய வேண்டும். எனவே பாடசாலை அதற்கேற்ப அமைந்து பணிபுரிய வேண்டும்.

ஆளுமையை விருத்தி செய்தல் என்பது மாணவர்கள் தம் இஷ்டப்படி நடக்கவிடுவது என்பதல்ல. அவர்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். அந்த நெறிப்படுத்தலில் காலத்தின் தேவைக்கேற்ப சில நெகிழ்ச்சித் தன்மைகள் புகுத்தப்படலாம். ஆனல் அது கட்டுப்படுத்துவதாயிருக்கிறது என்பதினல் முற்ருக நிராகரிக்கப்படவேண்டும் என்பது சரியல்ல. மன்றங்கள், விளையாட்டுப் போட்டிகள், ஏனைய வைபவங்கள் இடம் பெறுவதின் மூலம் மாணவர் பல் துறைப் பயிற்சியும் அனுபவமும் பெறுகின்றனர். பல்கலைக்கழக நுழைவுக்கு உதவாது என்பதால் இவற்றைப் புறக்கணித்தல் ஆளுமை விருத்திக்கு ஊறு செய்வதாகும்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னுள்ள காலத்தில் பாடசாலைகள் தற்போதுள்ளதுபோன்ற கீழ் நிலையை அடையவில்லை. அப்போது மாணவர்கள் பாடசாலையையே முற்றுமுழுதாக நம்பியிருந்தனர். கட்டுரையில் குறிப்பிடப்பட்ட எந்தக் குறைபாடும் அப்போது தம்மை வெளிக் காட்டியதாகத் தெரியவில்லை. காலப் போக்கில் ஏற்பட்ட சீரழிவுகள் காரணமாகவே தற்போதுள்ள நிலை தோன்றியுள்ளது. பெருகி வரும் மாணவர் தொகைக்கேற்ப பல்கலைக்கழகங்களில் இட வசதிகள் பெருகவில்லை. தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரையில் இந்த அம்சம் மிகமோசமாகவுள்ளது. எனவே மிகமோசமான போட்டி நிலவுகிறது. இக் கழுத்தறுப்புப்போட்டி காரணமாகத்தான் பரீட்சையில் திறமைச்சித்தி மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ள 'தனியார் கல்வி நிலையங்கள்' மகத்துவம் பெறுகின்றன. ஆதலினல் நாட்டில் தற்போதுள்ள தவருனநிலை காரணமாகவே இது உருவாகியுள்ளதென்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். எனவே தவறுகள் சரிசெய்யப்படின் நாற்பதாண்டுகளுக்கு முன்பிருந்த மதிப்பான இடத்தைப் பாடசாலைகள் பெறும் நிலை வரும். தவிர,

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய நாடுகளைப் பிடித்துலுக்கும் 'பசுமை அரசியல்'-அதன் எதிர்காலம்

இதுகாலவரை ஓடிவந்த உலக அரசியல், சமூக, பொருளாதாரப்போக்கு இரண்டு பிரதான கூடாரங்களுக்குள் அடைபட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அதாவது ஒன்று முதலாளித்துவ கோபுர முகப்புடைய கூடாரம். அடுத்தது பொதுவுடைமை சமதள விரிவுடைய கூடாரம். இவ்விரண்டுமே உலகைப் பீடித்துள்ள சகலரோக நிவாரணத்துக்குமுரிய நிலையங்களாகப் போட்டி போட்டு வந்துள்ளன; இன்னும் வருகின்றன. இக் கூடாரங்கள், எவ்வளவு தூரம் உலகைப் பீடித்த நோய்களிலிருந்து அதை விடுவித்தன என்பதை அறுதியிட்டுக் கூற முடியா விட்டாலும் இக்கூடாரங்களுக்கிடையே ஏற்பட்ட இந்த ''நிவாரண'' ''சிகிச்சைப்'' போட்டிகளால் உலகம் பெரிதளவு பாதிக்கப்பட்டு, பலவிதத்திலும், பல நிலைகளிலும் நோய்கூறு கொண்ட ஒரு ''நோயாளி''யாக இன்று மாறிவிட்டது என்பது மட்டும் உண்மை.

இவை பரப்பிய நோய்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வளர்முக நாடுகள் என்னும் பெயர் தாங்கிய வறியவர்கள் ''மூன்றும் உலகம்'' என்னும் வேலியைப் போட்டுக்கொண்டு, தமது தேவைக்கேற்ப இவ்விரு கூடாரங்கள் வழங்கும் நன்மைகளை மட்டும் கறந்து கொள்ளுபவையாக வாழ முற்பட்ட போதும், இவை ''கறந்த பாலு''டன் இக்கூடாரங்களின் தொற்றுக் கிருமிகள் இவற்றுள்ளும் புகுந்து இவற்றையும் ''கொக்கலு''க்கும் ''குலப்பு''னுக்கும் உள்ளாக்கவே, செய்துள்ளன.

இந்த நிலையில் தான் இன்று, இந்த நோயுற்ற உலகை உண்மையாகவே அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் ஓர் புதிய ''அரசியல்'' நோக்கு இன்று ஐரோப்பாவில் தோன்றியுள்ளது. அது தான் இன்று அதிகமாகப் பேசப்படும் கிறீன் பீஸ் (Green Peace) இயக்கமாகும். அதாவது இன்றுநமது பூமிக்கிரகமானது, நமது விஞ்

**சி. சண்முகவடிவேல்**

ஞான கண்டு பிடிப்பு, நாகரிகம் என்பவற்றாலேயே அழிவின் பாதைக்கு இட்டுச்செல்லப்படுகிறது. நாம் வாழும் சூழல் உயிர் வாழ்வதற்குத் தகுதியற்ற அசுத்த படலமாக்கப்பட்டுள்ளது, அணுக்குண்டு பரிசோதனை, அணு உலைகள், எரிபொருள் கழிவுகள் என்று எல்லாவகையாலும் நாம் உயிர் வாழும் புவி மண்டலம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இவைபற்றி இது காலவகை எந்த அரசியல்வாதியோ, சமூக சீர்திருத்தவாதியோ அக்கறைப்படவில்லை. ஆனல் அண்மையில் நேர்ந்த சேர்னேபில் (Chernobyl) அணுஉலை விபத்து, இந்திய போபால் நச்சுவாயுக்கசிவு ஆகியவற்றுக்குப் பின்னர் நமது பூமி பற்றிய சிந்தனையும் அது பற்றிய பாதுகாப்பும் அறிவுடையோரை சிந்திக்க வைத்தது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட, அன்டாட்டிக் பகுதிக்கு மேல் உள்ள ஓஸோன் துவாரம்! (Ozone Hole) இவை விரிவடையப்பட விடப்படுமானல் எதிர்காலத்தில் பூமியில் மனித இனமே அழித்தொழிக்கப் பட்டு விடும்.

இத்தகைய பேராபத்தை நமது உயிர் வாழும் நிலம் எதிர் கொண்டவண்ணம் இருக்கும் போது, அந்த ஆபத்தைத் தவிர்ப்பதே நமது தலையாய கடமையாகும். இன்று ஐரோப்பிய ''பசுமை அரசியல்'' (Greens) வாதிகள் முன் வைக்கும்வாதம் இதுவே. சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம். சுவரே அழிந்த பின்னர் சித்திரம் எங்கே இடம்பெறப் போகிறது?

முதலாளித்துவக் கூடாரமும் சரி பொதுவுடைமைக் கூடாரமும் சரி உலகம் இருந்தால்தான் தம் கை வண்ணத் தைக்காட்டலாம். உலகமே அழிந்த பின்னர் இவை யாருக்குத் தேவைப்படப் போகின்றன?

ஆகவே ஐரோப்பாவில் இந்தப் புதிய பசுமை அரசியல் வாதிகள் ஒரு தனிச் சக்தியாக இடம்பெறத் தொடங்கியுள்ளனர். ஆரம்பத்தில் வெறும் ''கழுவப்படாத கருத்துமுதல் வாதிகளாக'' எள்ளி நகையாடப்பட்ட இவர்கள் இன்று மிகுந்த கணிப்புக்கும்; கணிசமான அளவு மக்கள் சக்தி கொண்டவர்களாகவும் இயங்கத் தொடங்கியுள்ளனர். இதற்கு உதாரணமாக கடந்த மே மாதம் நெதர்லாந்து பிரதமர் றூட் லுபேர்ஸ் பதவி இழந்ததைக் காட்டலாம். நெதலாந்தின் சூழல் அசுத்தப்படுத்தலுக்கெதிரான திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான பணத்தை அறவிடல் சம்பந்தமான வாக்




கெடுப்பில் நேர்ந்த தகராறே இவர் பதவி விலகலுக்குக் காரணம்.

இதைத் தொடர்ந்து பசுமை அரசியல் அலை ஐரோப்பா முழுதும் வேகமாக அடிக்கத் தொடங்கியுள்ளது. மரபுரீதியான கட்சி அரசியல்கள் இதனல் பின்தள்ளப்பட்டு வரும் நிலைக்குள்ளாகியுள்ளன. அண்மையில் பிரான்ஸில் நடந்த நாடு தழுவிய முனிசிபல் தேர்தலில் பசுமை வேட்பாளருக்கே அதிகப்படியான வாக்குகள் விழுந்துள்ளன.

இதை இன்னும் உறுதிப்படுத்துவது போல் அமைந்துள்ளது கடந்தவாரம் நடந்த ஐரோப்பிய பொதுச்சந்தைகளுக்கான நாடாளுமன்றத் தேர்தல். இத்தேர்தலில் இங்கிலாந்தின் மார்கிரட் தட்சரின் கட்சி பின் தள்ளப்பட்டு தொழிற்கட்சி கூடுதலான இடத்தைப் பெற்றுள்ளது.

இவையெல்லாவற்றையும் விட பசுமை அரசியல் வாதிகளே இதில் கூடுதலான இடங்களைப் பிடித்துள்ளனர். பிரான்ஸ், ஜேர்மனியில் இவர்களின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. இத்தேர்தலில் வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த வலதுசாரி இடதுசாரி கட்சிகள் என்பவை முக்கிய மற்றவையாக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தப்போக்கு உலக அரசியல் போக்கில் எதைச் சுட்டுகிறது என்பதே முக்கிய கேள்வியாக இன்று எழுந்துள்ளது.

இதுகாலவரை இடதுசாரி, வலதுசாரி கூடாரங்கள் என்று ஓடிவந்த உலக அரசியல் போக்கு, இனிமேல் புதிய தொரு அரசியல் போக்கால் விழுங்கப்படப்போகிறது என்பதையே இது சுட்டுகிறது. இந்தப் புதிய அரசியல் அலை என்பது ''பசுமை'' அரசியலே. முதலில் நமது பூமியை அழிவிலிருந்து காப்பாற்றுவோம். பின்னர் அதன் அபிவிருத்தியின் ''நிறங்கள்'' பற்றிப் பேசுவோம் என்பதே இந்தப் ''பசுமை'' வாதிகளின் வாதமாகும்.

எனவே இனி இவர்களுக்கான ஆதரவு, இடதுசாரி வலதுசாரி என்ற பிரிவுகள் மறந்த, சகல கூடாரங்களில் இருந்தும் எழப்போகிறது. இது ஒரு புதிய சக்தியாக எழப்போவதோடு தேவையற்ற 'இஸங்கள்' அகன்ற ஒரு முழு மனிதத்துவத்தைப் பேணும் ஒன்றாகவும் விரிவடைந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. □

# ரஜீவ் காந்தியின் செல்வாக்கில் வீழ்ச்சி

## — அபிப்பிராய மதிப்பீடு

திரு. ரஜீவ் காந்தி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தலைவரென்றாலும், 1984 பொதுத்தேர்தலுக்குப் பிறகு அவரின் செல்வாக்கில் சிறிது விழுக்காடு ஏற்பட்டுள்ளதாக சமீபத்தில் மேற்கொள்ளப் பட்ட அபிப்பிராய மதிப்பீடு ஒன்றிலிருந்து அறியமுடிகிறது. இம்மதிப்பீடு கல்கத்தா, பம்பாய், டெல்லி, சென்னை ஆகிய பெரிய நகரங்களில் ஒன்-லைன் பிஸினஸ் கொம்யூனிக்கேஷன்ஸ் என்ற வியாபார ஸ்தாபனத்தாலும், லொக்கற் பத்திரிகை நிறுவனத்தாலும் கூட்டுச் சேர்ந்து நடத்தப்பட்டது.

பம்பாய், டெல்லி, சென்னை ஆகிய நகரங்களில் உள்ள தொகுதிகள் ரஜீவ் காந்தியை அதிக புகழ் உடைய தலைவராகக் கணித்துள்ளன. ஆனல், மாற்றுக் கட்சி அரசாங்கம் நடைபெறும் மேற்கு வங்காளத்தின் தலைநகரமான கல்கத்தாவில் முதன் மந்திரி ஜோதிபாசுவுக்கு அடுத்தபடிதான் ரஜீவின் புகழ்.

வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, பயங்கரவாதம் ஆகியனவற்றை இல்லாமல் செய்வதில் பம்பாய், டெல்லி, சென்னை ஆகிய நகரங்கள் மதிப்பீட்டில் ரஜீவுக்கு முதலிடம் தருகின்றன. ஆனல், பணவீக்கம் ஊழல் முதலியவற்றை ஒழித்துக்கட்டுவதில் ரஜீவ் சாதாரண மட்டத்திற்கும் கீழ் என்பது அபிப்பிராய மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது. கல்கத்தாவைப் பொறுத்தவரை பயங்கரவாத ஒழிப்பு ஒன்றைத்

**ஈ. ஆர். திருச்செல்வம்**

தவிர, மற்ற விஷயங்களில் இவர் செயற்பாடு போதாது.

எதிர்வரும் தேர்தலில் எதிர்க் கட்சிகள் ஒன்றிணையாமல் தனித்தனியாகத் தேர்தல் களத்தில் குதித்தால் இந்திரா கொங்கிரசிற்கு வெற்றி கைமேல். ஆனல் எதிர்க்கட்சிகளின் இணைப்பு நம்பிக்கையற்றது என்று மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது.

''எதிர்க் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தேசிய முன்னணி ஒன்றை நிறுவும் பட்சத்தில் இந்திரா கொங்கிரஸ் தேர்தலில் வெற்றி கொள்ளுமா ?'' — இது அபிப்பிராய மதிப்பீட்டில் ஒரு கேள்வியாகும். இவ்வினவுக்கு கல்கத்தாவைத் தவிர மற்ற மூன்றுநகரங்களும் சாதகமாகவே கருத்து தெரிவித்துள்ளன. எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்தால் இந்திரா கொங்கிரஸ் தேர்தலில் தோல்வியைத் தழுவும் என்பது கல்கத்தா நகரின் கணிப்பீடாகும்.

பெரும்பான்மை அபிப்பிராயப்படி ஒன்றில் எதிர்க் கட்சிகளின் தேசிய முன்னணி உருவாவதுசாத்தியமில்லை. அல்லது எதிர்க் கட்சிகளுக்கிடையில் நிலவிவரும் குழப்பமான நிலை இனிமேல்தான் சீரடைய வேண்டும்.

அபிப்பிராய வாக்கெடுப்பில் அதிமுக்கியமானது. இன்றுபெரிதாக விளம்பரப்படுத்தப்பட்ட 'தேசிய முன்னணி' என்ற எதிர்க்கட்சி எண்ணக்கரு இன்றுவரை மக்கள் மத்தியில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லையாம்.

சவ்னார் ஹஸ்மி கொலை வழக்கு, போர்பஸ், தமிழ் நாட்டுத் தேர்தல் தொடர்பான சிர்கேடுகள், தேர்தல் களத்தில் இந்திரா கொங்கிரஸிற்கு சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியவை. ஆனல் இவையெல்லாம் காலப்போக்கில் தேர்தல் திட்டங்களைப் பாதிக்கப்போவதில்லையென்பது அபிப்பிராய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும்.

கருத்தறியக் கொடுக்கப்பட்ட 1710 வினக்கொத்துகளில் மொத்தம் 1608 கணனியின் (கம்பியூட்டர்) கணக்கெடுப்புக்காக ஏற்றுக் கொள்ளப் பட்டன. இந்த வினக்களுக்கான விடைகள் எழுத்து மூலமே கோரப்பட்டன.

ஆதாரம்; நியூஸ் ருடே (சென்னை) □

## சிந்தனை...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகம் செல்லும் சிறு பகுதி மாணவர் நலன்களை மட்டுமே கவனிப்பதென்பதும் பிழையானது. பாடசாலை அமைப்பிலும் கல்வி முறையிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் மென்பதை ஏற்றுக்கொள்வோம். ஆனல் அதற்காக பாடசாலைகளைப் புறக்கணிப்பதென்பது தவறானது.

நம்மில் பலர் பரீட்சைகளில் திறமைச்சித்திகள் பெற்றிருக்கிறோம்; படித்துப் பட்டங்கள் பல பெற்றிருக்கிறோம். எனினும் இன்றைய நிலையில் நம்மெல்லோருடைய வாழ்க்கையும் தோல்வியடையும் நிலையிலேயே உள்ளது. வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் பாடசாலைகளே தோல்வியடையும்போது வாழ்க்கையும் தோல்வியடைவது தவிர்க்க முடியாததா......? இதுபற்றி நாமெல்லோரும் அவசரமாகச் சிந்திக்க வேண்டும். ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். □

## இலங்கை - இந்திய

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இலங்கைத் தமிழ்மக்களை இலங்கை இராணுவத்தின் கொடூரங்களில் இருந்து காப்பாற்றப்போன இந்திய அமைதிப்படை, தானே அங்குள்ள முக்கிய போராட்டக் குழுவோடு சண்டை பிடிக்கவேண்டிய நிலைக்குள்ளானது.

இன்று இந்தியப்படை வெளியேறக் கூடாதென்பதற்கு ஆதரவாக முக்கியமாகக் காட்டப்படும் காரணம், இந்திய அமைதிப்படை விலகிப்போனால், இலங்கை ராணுவம் மீண்டும் தனது அராஜகத்தை தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் என்பதே. ஆனால்இதைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் வல்லவர்களாய் தமிழ்மக்கள் உள்ளனர் என்றே சொல்ல வேண்டும்.

இந்நிலையில் செய்யவேண்டியவை என்ன?

* உடனேயே இலங்கையரசு கேட்டுக்கொண்ட காலக்கெடுவுக்குள் இந்தியப்படையை விலக்குவதற்கு வழிவகுத்தல்.

* இலங்கை அரசோடு எல்.ரி.ரி.ஈ. யினர் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அவர்களைத் "தேடி அழிக்கும்" முயற்சி கைவிடப்பட வேண்டும்.

* மீண்டும் எமது பாரபட்சமற்ற நட்புறவை இலங்கையோடு மேற்கொண்டு, அழிக்கப்பட்டுள்ள வடக்கு- கிழக்கு மாகாணப் பகுதிகளை புனருத்தாரணம் செய்ய உதவுதல்.

* ஜனாதிபதி பிரேமதாஸ, முன்னைய ஜனாதிபதிபோல் அரசியலில் கைதேர்ந்தவராகவும் நுட்பமான புத்திசாதுர்யம் உடையவராகவும் இல்லாமலிருந்தாலும் இவர் தானொரு சாதனைக்குரிய செய்தியோடு வந்தவராக தன்னைக் காண்பதால், இலங்கை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டும் என்று தீர்க்கமாக உறுதிகொண்டுள்ளார். இந்நிலையில் இலங்கை அரசும் எல் ரி.ரி,ஈ. யும் இணக்கங்காணும் பட்சத்தில், அதை நடைமுறைப்படுத்த அவர்களுக்கேன் இடமளிக்கக்கூடாது?

* ஆகவே நாம் நேருவின் நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வருடத்தில் அவர் மேற்கொண்ட மேன்மையும் நாகரிகமும் மிக்க வழிகளைப் பின்பற்றி இந்திய அமைதிப் படையை வாபஸ்பெறச் செய்ய வேண்டும். □

## மாசலின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின்றி உரைக்கப்படும். எனது தனித்துவ நிலைக்கும் எனது வாழ்க்கைக்கும் இடையில் உள்ள தொடர்பை ஒத்ததே இதுவும். விவாதத்துக்கு இடமின்றி வரலாற்றுக்குப் பொருள் உரைக்க எந்தக் கணத்தில் முடியும்? ஆன்மாவைத்தானாகவே (சுயமாகவே) அவதானித்துத் தனியாகக்காணும் செயலின் ஒரு அம்சமாக அது இனம் கண்டு சுட்டப்படும் பொழுதுதான். மனித ஆளுமையுடையோன் தனித்து (ஆமைபோல ஐந்தடக்கி) இருக்கும்போது அல்ல; (சமூகத்தில்) பங்கு பற்றும் போதுதான் நிஜநிலை அடைகிறான் என்பதை இறுகப்பற்றி, அவனுக்கு மிக உந்நத முக்கியத்துவம் கொடுக்கும் போதுதான், அவனுடைய நோக்கத்துக்கு இந்தத் தொழில் நுட்பத்திறன்கள் தடையாக இருக்கமாட்டா; இதற்குப் பதிலாக அவை முழுமையின் சிறுசிறு பகுதிகளாக, மனிதன் இருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தின் பகுதியாக நிலைக்கு ஏற்ப உள்வாங்கப் பட்டுவிடும்.

தொழில் நுட்பவியல் ஆட்சி பற்றித் தீரச்சிந்தித்த மாசல் அது பற்றி மிகக் கடும் பயம் கொள்ளக்காரணம் என்ன? தொழில் நுட்பவியல் அவனது மறைந்து கிடக்கும் அற்புதமான அறிவுத்திறனை, புதியது புனையும் ஆற்றலை, வெளிக்கொணர வாய்ப்பளிக்கிறது; அத்துடன் அவனது வாழ்க்கையை வசதி நிறைந்ததாயும், வேகமாக இடம் பெயர்ந்து செல்ல வகை செய்வதாயும் ஆக்குகிறது; என்றாலும் புதுய கண்டுபிடிப்புகள் அவனைக் குருடாக்கி விடுகின்றன; மனிதனை மனிதனாக மதிக்கும் விழுமியத்தை அவன் இழந்து விடுகிறான் என்பதே. விஞ்ஞான—தொழில் நுட்பப் புதுமைகள் என்ற போதைப் பொருளால் தன்னை இழந்த அவன் தன்னிடமிருந்தும் பிற மனிதரிடமிருந்தும் எங்கோ தூரவிலகி விடுகிறான். இதன்பயனாக, மனிதன் தொழில்நுட்ப அதிசயத்தைச் சாதனை புரியும் வெறும் செயற்கருவியாகிக் கொண்டுவருகிறான். அதனால், மனித கௌரவத்தையும் உந்நத நிலையையும் உணரும் உயர் நோக்கத்தை இழந்து விடுகிறான். மாசல் தொழில் நுட்பவியலையும் தொழில் நுட்பர் ஆட்சியையும் சுவைக்கவோ மதிக்கவோ தயங்கி நிற்பதற்குக் காரணம் இந்த அகப்பூசலும் ஆழ்ந்த அக்கறையுமே. □

## கால்களை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நுட்ப வசதியனைத்தையும் வழங்கினர். அவர்களது உதவி மனித இனத்திற்கு வழங்கிய முன்னேற்ற நன்மைகளில் ஒன்றாகும். கொழும்பில் 6 மாதப் பயிற்சி பெற்ற, வலது குறைந்த, இரண்டு இளைஞர்களுடனும், தொழில்நுட்பப் பயிற்சியைக் கொழும்பில் பெற்ற ஒரு முகாமையாளருடனும் எமது முயற்சியை ஆரம்பித்தோம். யாழ்.நகரில் சுண்டிக்குளியில் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்றோம். சிறு திருத்தங்களும், மாற்றல்களும் செய்து ஐந்து படுக்கை வசதிகள் கொண்ட ஒரு விடுதியை அமைத்தோம். அங்கவீனர்களுக்கு செயற்கைக்கால் பொருத்தும் பணி நடைபெற்றது. இக்காலத்து முகாமையாளராகப் பணிபுரிந்த X.S Y பிரான்சிஸ் அவர்கள் ஜெய்ப்பூர் சென்று மூன்று வாரத்தில் துரித பயிற்சியைப் பெற்று, மீண்டும் வந்து இங்கு புதிய நோக்குடன் பணிபுரிகின்றார் என்பதை மகிழ்வுடனும், பெருமிதத்துடனும் அறிவிக்கின்றோம்.

தேசிய மட்டத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அரும்பணி புரிந்து சகல துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நிர்வாகக் குழுவினர்க்கும், ஸ்தாபன ஊழியர்களுக்கும் எமது விசுவாசத்தையும், இதயம் கலந்த நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

நிறுவனம் இயங்க ஆரம்பித்த காலத்தில் பல அங்கவீனர்கள் இருந்தமையால், மனந்தளர்ந்து செயலிழந்த குடும்பத் தலைவர்களுக்கும் மாணவர்களுக்கும் பாதணிகள் பொருத்துவதில் முன்னுரிமை வழங்கினோம். அவர்கள் ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டு வீடு திரும்பும் போது புன்சிரிப்புடன் ஒளிமயமான எதிர்காலத்தைக் காணும் அவாவுடன், எவர் உதவியுமின்றி நடந்து சென்றதைக் காண முடிந்த நாம் அனைவரும் புளகாங்கிதம் அடைந்தோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திங்கட்கிழமையில் வருமாறு பணிக்கப்படுகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் படுக்கையும் சிறு அலுமாரியும் வழங்கப்படுகின்றது. உணவும், தங்குமிடவசதிக்குமாக குறைந்த கட்டணமே அறவிடப்படுகின்றது. அத்தோடு அங்கவீனர்களின் தேவைகளைக் கவனிக்க ஓர் தாதியும், நீரிழிவு நோயாளருக்கு ஊசிபோட ஓர் தாதியும் அமர்த்தியுள்ளோம். இங்கு சாதி, மத, இன, பேதமின்றி எல்லோரையும் சமமாக மதித்து, சமபங்களிப்பு செய்யப்படுகின்றது. அங்கவீனர்களின் எதிர்காலத்தையும் அவர்களின் புனருத்தாரணத்தையும் கவத்திற்கொண்டு ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர் சங்கம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளோம். அங்கவீனர்களெல்லோரும் பொது வாழ்க்கை நீரோட்டத்தில் பங்குபற்றக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தைப் பெற வேண்டும் என்பதே எங்கள் பெருவிருப்பமாகும். □

## போல் கொக்ஸின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெறியாளர் போல் கொக்ஸ் கிழக்கத்திய வாழ்க்கை முறையையும், இடர்பாடுகளிலிருந்து தப்பியோடாது அவற்றுக்கு முகம்கொடுத்து வாழும் ஆசியப் பெண்களின் பலம்மிக்க குணம்சத்தையும் இணைத்துள்ளமையும், குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்படத்தில், அரசியல்வாதியான தனது கணவன் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியைத் தொலைபேசி மூலம் அறியும் வேளையில் தனக்கு செயற்கையாக அழுகையேற்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லையென்றும், இலங்கையின் அவல நிலைமைகள் உண்மையிலேயே தன்னை அழவைத்தன என்றும், அனோஜா கூறியுள்ளார்.

அனோஜா மரணச் சடங்கிற்காக இலங்கை கிளம்ப இருக்கும் வேளையில், அவரது பாதுகாவலராகவே ( protector ) மாறிவிட்ட, யுத்தத்தில் கணவனையும் குழந்தைகளையும் இழந்த ஐரோப்பிய பெண்ணான ஐறீன் பப்பாஸ், அனோஜா தாயகம் திரும்புவது அவரது பாதுகாப்புக்கும் உகந்ததல்ல என்று கூறித் தடுக்க முயல்கிறார். அனோஜா அதனை நிராகரித்து விடுகிறார்;

"நான் இஞ்ச வந்ததே அவருக்காகத்தான்; எனக்காக இல்லை. உயிரோட அவரப் பாக்க அங்கலாய்ப்போட பாத்துக்கொண்டிருந்தன். அது முடியேல்லை, இப்ப போனால அவற்றை பிரேதத்தையாவது பாக்கலாம். என்ர கணவனுக்காக மட்டும் நான் அழேல்லை; என்ர நாட்டு மக்களுக்காகவும், என்ர நாட்டுக்காகவுந்தான் அழுறன்"

போல் கொக்ஸ் இயலுமான வரை யதார்த்தபூர்வமானதாக இத்திரைப்படத்தைப் படைக்க முயன்றுள்ளார்.

ஆதாரம் : தி ஐலன்ட் □

## நிகழ்வுகள்

**20-6-89 செவ்வாய்**

யாழ். ஆஸ்பத்திரிக்கு இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்தவங்கி அதிகாரி தெரிவித்தார்□ ஐந்து மாத கால இடைவெளியின் பின்னர் மீண்டும் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிறப்பித்தார்□ மல்லாகத்திலும் மாவிட்டபுரத்திலும் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்□ கொழும்பில் வழமைநிலை மேலும் பாதிப்படைந்தது. ரயில்வே ஊழியர்களும் வேலைக்குச் செல்ல மறுத்தனர்□ வடக்கு கிழக்கில் அமைதிப் படையால் தமிழ்க் கிளர்ச்சியாளர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய முடியவில்லையென, நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவித்தார்□ பாதுகாப்பை உறுதிப்படுத்தி தமது கல்வியைத் தொடர உதவுமாறு கோரி, பாடசாலை மாணவர்களின் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது□ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற வாகனங்கள் மீது றம்பாவைக்கு அருகில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் சிலர் காயமடைந்தனர்□ அமைதிப் படை விவகாரத்தை ஐ. நாவுக்கு எடுத்துச் செல்லும் நோக்கம் இலங்கைக்கு இல்லையென வெளியுறவு அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறினார்□

**21-6-89 புதன்**

யாழ். பல்கலைக்கழகத்தில் 'புவியியலாளன்' சஞ்சிகை வெளியீட்டு விழா நடைபெற்றது□ பிரேமதாஸவிற்கு ராஜீவ் காந்தி எழுதிய பதில் கடிதத்தில் தமது முன்னைய நிலைப்பாட்டையே வலியுறுத்தியுள்ளதாக வெளியுறவுப் பேச்சாளர் புது டெல்லியிற் கூறினார்□ பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் பெருந்தொகையாகக் கைது செய்யப்படுவது அதிர்ச்சி தருவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர், ஊழியர், மாணவர் சங்கங்களின் இணைப்புக் குழு தெரிவித்தது□ திருநெலவேலிப் பகுதியில் மோதல் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். இதையடுத்து இப்பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது□ தனது உறுப்பினர்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டுவரும் நிலையில் தனது நிலைபாட்டை மீள்பரிசிலனை செய்யப் போவதாக ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவித்தது□

**22-6-89 வியாழன்**

வேலைநிறுத்தம் செய்யும் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப 26 ஆம் திகதியைக், காலக்கெடுவாக அரசாங்கம் அறிவித்துள்ளது□ யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு 30 அமைதிப்படையினர் இரத்த தானம் செய்தனர்□ ஜே. வி. பியின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து ஹொட்டேல்களில் தங்கியிருந்த இந்தியப் பிரமுகர்கள் தமது இல்லங்களுக்குத் திரும்பத் தொடங்கினர்□ நாட்டில் எயிட்ஸ் நோய் பீடித்திருப்பவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்தது□ பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்□

**23-6-89 வெள்ளி**

வருகிற ஜூலை மாத முடிவுக்குள் அமைதிப்படை விலகியே ஆகவேண்டும். இல்லையேல் முகாம்களுக்குள் இருக்க வேண்டுமென்று ஜனாதிபதி அறிவித்தார்; மஹியங்கனையில் கம் உதாவ பொருட்காட்சியைத் தொடக்கி வைக்கையிலேயே இவ்வாறு கூறினார்□ மூன்று இயக்கங்கள் இணைந்து 'தமிழ் தேசியமன்றம்' ஒன்றை அமைத்திருப்பதாக K. பத்மநாபா திருமலைப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்□ களுபோவிலைப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டதில் 2 பேர் இறந்தனர். T 56 ரக துப்பாக்கிகள் 10 அபகரிக்கப்பட்டன□ நாகர்கோவில், குடத்தனைப் பகுதிகளில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது□

**24-6-89 சனி**

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடந்தது.□ கைதடிப் பகுதியில் காலை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது□ நெல்லியடியில் காலை கிரனேட் வீச்சு இடம்பெற்றது. இதனை அடுத்து நாலா பக்கங்களிலும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன□ கிளிநொச்சி திருநகரில் நண்பகல் 11 மணியளவில் மோதல் சம்பவமொன்று இடம் பெற்றது. படையினரில் 8 பேரும் மறுதரப்பில் 2 பேரும் கொல்லப்பட்டனர். பின்னர் மாலை வரை தொடர்ச்சியான ஷெல் வீச்சு நடந்தது□ அமைதிப் படை விவகாரம் அடுத்த மாதம்நடக்கவிருக்கும் 'சார்க்' அமைப்பின் அமைச்சர்கள் மட்டமாநாட்டில் பரிசிலனைக்கு எடுக்கப்படுமென பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகூப் கான் தெரிவித்தார்□ மினுவாங்கொடையில் இரு தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் மோதிக் கொண்டன□

**25-6-89 ஞாயிறு**

யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசளிப்பு விழாவும், மதுர கவிதைகள் நூல் வெளியீடும் நல்லூரில் நடைபெற்றது□ ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா டானியல் அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் அவரது கார்ச்சாரதியும், பொலிஸ்காரர் ஒருவரும் பலியாகினர்□ கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தியது. இதனால் அப்பகுதி மக்கள் வெளியேறுகின்றனர்□

**26-6-89 திங்கள்**

ஜே. வி. பி. யின் ஊரடங்கு உத்தரவினால் கொழும்பு நகரம் வெறிச்சோடியது. உத்தரவை மீறி ஓடிய வாகனங்கள் சிலவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது□ அமைதிகாக்க வந்த இந்தியப் படை இன்று போரிடும் படையாக மாறிவிட்டது என்று, ஜனாதிபதி மஹியங்கனையில் குறிப்பிட்டார்□ வடமராட்சியின் பல பகுதிகளில் மோதல்களும் தேடுதல்களும் இடம் பெற்றன□ ஜே. வி. பியின் அரசியல் விரிவுரையாளர் எனக் கருதப்படும் 24 வயது இளம் பெண்ணை காலிப் பொலிசார் கைதுசெய்தனர்□

திசை
THISAI

# இந்தியா பாகிஸ்தானை தாக்கலாம் — பென்ரகன் அறிவிப்பு

இந்தியா பாகிஸ்தானைத் தாக்கலாம் என பென்ரகன் செயற்குழு அண்மையில் அறிவித்துள்ளது. இத்தாக்குதல் இடம்பெறும் பட்சத்தில் அமெரிக்கா இதையிட்டு ஒன்றும் செய்ய முடியாத நிலையிலேயே இருக்கும் என்றும் அது அறிவித்துள்ளது. அத்தோடு சீனவும் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக மீண்டும் இந்தியாவைத் தாக்கலாம் எனவும் அறிவித்துள்ளது.

இந்தியாவினதும் சீனவினதும் ராணுவரீதியிலான பலம் வேகமாகக் கூடிவருவதாகவும், இவற்றுள் இந்தியாவினது 1.25 மில்லியன் அளவு பெருயுள்ள ராணுவத் துருப்பின் எண்ணிக்கை மிகுந்த அச்சுறுத்தலுக்குரியதாகும் எனவும் பென்ரகன் அறிவித்துள்ளது.

அது மேலும் தெரிவித்திருப்பதாவது :-

இந்தியாவின் ராணுவம் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியை தன்னகத்தே கொண்டிருப்பதோடு, சோவியத்யூனியனிடம் இருந்து பெறப்பட்ட நவீன அணுச்சக்தி நீர்மூழ்கிக் கப்பல், முதல்ரக விமானங்கள், விமானந் தாங்கிகள், ஏவுகணைகள் என்று பலதையும் உள்ளடக்கியுள்ளது. இந்தியா இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனி ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் அதன் ராணுவத் தலையீடு இதையே காட்டுகிறது. தமது ராணு ஆதிக்கத்தைக் கூட்டிக் கொள்ளும் எந்தநாடும் தமது அண்டை நாடுகளோடு, தமது ராணுவப் பலத்தைக் காட்டத் தயாராயிருக்காது என்று கூறமுடியாது.

பென்ரகன் செயல் குழுவில் உள்ள பலர் மக்களுக்கு அதிகம் அறிமுகம் இல்லாதவர்களாய் இருந்தாலும், முன்னைய அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹென்றி கீஸிங்கர், முன்னைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிறசென்ஸ்கி போன்றவர்களும், அதில் அடங்குவர்.

## திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### எது செய்யப்படவேண்டும் ?

இலங்கையிலிருந்து அமைதிப்படையை வெளியேற்றவேண்டும் என்பது வெறும் கருத்தளவில் இருந்து, பின்னர் கோரிக்கையாக மாறி, தற்போது பெரும் போராட்டத்துக்குரிய கோஷமாகத் தென்னிலங்கையில் வெடித்துள்ளது.

நாடு தழுவிய இப்போராட்டத்துக்குரிய தலைமையை, ஜே. வி. பியினர் ஏகபோகமாகச் சுவீகரித்துக் கொள்வதற்கு முன்னர், தானே அத்தலைமைத்துவத்தைச் சூடிக்கொள்ள ஜனாதிபதி பிரேமதாஸ முனைந்ததின் விளைவே, இன்று இப்பிரச்சினை விஸ்வரூபம் கொள்ளக் காரணமாயிற்று.

அதனால், இந்திய அமைதிப்படை ஜூலை 29க்குள் வெளியேற வேண்டும் என இவரால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்குப் பதிலாக, இவை கலண்டரைக்கொண்டு தீர்மானிக்கப்படும் விஷயமல்ல, அமைதிப்படை தான் வந்த பணியை நிறைவேற்றிவிட்டதா என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப் படவேண்டும் எனப் பதில் கொடுத்தது, இந்திய அரசு.

நீங்கள் வந்த காரியத்தை முடிக்காமல் இரண்டு வருடங்கள் மட்டுமல்ல பத்து வருடங்கள் வரை கூட இதையே கூறிக்கொண்டு நிற்கலாம். இதை நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பதா? இது எங்கள் சுயாதீனத்துக்கும் கௌரவத்துக்கும் இழுக்காகும் என்கிறது இலங்கை அரசு.

நாங்கள் இங்கிருந்து இப்பவும் போகத் தயார். ஆனால நீங்கள்தான் நாம் இங்கு நீடித்திருக்கச் செய்யும் வழிவகைகளைச் செய்கிறீர்கள். மாகாண அரசுக்குரிய அதிகாரப் பரவலாக்கத்தையும் சுயாதீனத்தையும் வழங்குங்கள். வட-கிழக்குத் தமிழ்பேசும் இனத்தின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துங்கள். இதுவே ஒப்பந்தத்தின் மூலம் நாம் அடைந்த லாபமாகக் கொள்ளுவோம்; நாம் வெளியேறுவோம் என்கிறது இந்திய அரசு.

இங்கே ஓர் உண்மை புலப்படவேண்டும்.

இந்தியப் படையின் இலங்கை வருகை என்பது, அதன் தென்னாசியப் பிராந்தியப் பாதுகாப்பாகவும் அதுவே இலங்கைக்குரிய பிராந்தியப் பாதுகாப்பாகவும் அமைகிறது என இந்தியா தெளிவாகக் கூறியுள்ளது.

ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்கள் வாழும் வட—கிழக்குப் பிராந்தியம் பெற்றுக்கொள்ளும் அதிகாரப் பரவலாக்கம் என்பதும் இதையே சுட்டிநிற்கிறது.

இவற்றைக் கணக்கிலெடுக்காது இந்தியப்படையை வெளியேறக் கோருவது, அது தாமதிப்பதற்குரிய சாட்டுக்களை நாமே உருவாக்குபவர்களாக இருப்போம்.

இதனால்தான் ஐலன்ட் பத்திரிகை அண்மையில் எழுதிய தனது ஆசிரியர் தலையங்கத்தில், 'எல். ரி. ரி. ஈயினரோடு பேச்சுவார்த்தை நடத்தும் அரசாங்கம், வட—கிழக்குப் பகுதியை விட்டு இந்தியப்படை வெளியேறும் பட்சத்தில் இங்கு மீண்டும் இரத்தக்களரி ஏற்படாமல் இருக்க வழிவகுக்குமா? இல்லையெனில் மீண்டும் இதைக்காரணமாகக்கொண்டு இந்தியப்படை திரும்பிவர வாய்ப்புகள் உண்டு' எனக் கூறியுள்ளது.

அப்படியானால் இந்நிலையில் செய்யவேண்டியது என்ன?

வட—கிழக்கு மாகாணத்துக்குரிய அதிகாரப் பரவலாக்கத்தையும் தன்னாதிக்கத்தையும் வழங்குவதற்கு அரசு முன்வரும் அதே நேரத்தில் வட—கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் போக்கையும் அரசு மேற்கொள்ளவேண்டும். (இதுபற்றி 1ஆம் பக்கச் செய்தி பார்க்கவும்)

யதார்த்தபூர்வமாக இச்செயல்கள் அணுகப்பட்டால், அரசு தனக்கெதிரான எந்தக்கோஷத்தையும் வென்று தன்னை ஸ்திரப்படுத்துவதோடு இந்தியப் படையையும் வெளியேற்ற வழிவகுத்ததாய் இருக்கும்.

## திசை திருப்புவதே அரசின் நோக்கம்

''இலங்கை அரசு என்றுமில்லாதவாறு மாபெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளமையால், சாதாரண நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த மக்கள் நாளாந்த வாழ்க்கையை நடாத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

தென்னிலங்கை மக்களின் கோபாவேசத்திலிருந்து தமது அரசை காப்பாற்றிக் கொள்ளும் வகையில் அம்மக்களின் கவனத்தை வேறு பக்கம் திசை திருப்பும் நோக்குடன் தான் இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டுமென காலக்கெடு விதித்து கச்சை கட்டுகிறார் ஜனாதிபதி பிரேமதாச.

இவ்வாறு ஈழத் தொழிற் சங்க சம்மேளனம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

## சென். மைக்கேல் சம்பியனானது

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு சென். மைக்கேல் கோஷ்டி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

## விபத்தில் ஏ.ஜே.

யாழ். பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியரும் பிரபல விமர்சகருமான திரு. ஏ ஜே. கனகரத்ன, கடந்த ஞாயிற்றுக் கிழமை வான் ஒன்றினால் மோதப்பட்டதன் காரணமாக யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அவசரகாலநிலை பிரகடனம்: அந்தரங்கம் என்ன?

— *ஈ. பி. ஆர். எல். எவ்.*

ஈ, பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட இரண்டு வெவ்வேறான பிரசுரங்களில் இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம், வெடி மருந்து போன்றவை வழங்குவதோடு, அவர்களுக்கு வட. கிழக்கில் உள்ள இலங்கை இராணுவ முகாம்களில் புகலிடம் அளிப்பதாகவும் கூறியுள்ளது.

இன்னும், இன்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலைமை, வடகிழக்கு மாகாண சபையைக் கலைத்து, அதன் முதல்வரையும் கைது செய்யும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டுள்ளதாக, அவர்களின் இன்னொரு அறிக்கை கூறுகிறது.

அத்தோடு எஸ். எல். எவ். பியால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய எதிர்ப்புவாதம், ஜே. வி. பி. யால் பிரசாரப்படுத்தப்பட்டு யு. என். பியால் ஆதரவு அளிக்கப்பட்சி தற்போது மலை நாட்டுத் தமிழர்களுக் கெதிரான வன்முறைப் போக்காக மாறியுள்ளது என்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி துண்டுப் பிரசுரங்கள், முறையே யாழ்ப்பாண நாடாளுமன்றப் பிரதிநிதி யோகசங்கரியாலும், சென்னையிலுள்ள ஈ.பி. ஆர். எல், எவ். பிரதிநிதியாலும் வெளியிடப்பட்டன.

## நிரந்தர...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தத்துக்கு சம்மதித்துள்ள போதும் அவர்கள் தமது இறுதி இலட்சியமான தமிழீழக் கோரிக்கையிலிருந்து விலகவில்லை என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால் எது எப்படியிருந்த போதும் இன்று புலிகள் நிரந்தர யுத்த நிறுத்தத்துக்குச் சம்மதித்து, இலங்கை அரசோடு ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளமை, மிகுந்த நுணுக்கமான அணுகுமுறையை இலங்கை அரசிடம் கோரியுள்ளதென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. காரணம் இன்று புலிகளும், தமிழீழக் கொள்கையிலிருந்து நீங்காத போதும் ஒரு மாகாண அரசைக் குறிக்கோளாகக் கொண்டே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஆனால் அது வெறும் அதிகாரமற்ற அரசாக இல்லாமல் சகல தன்னாதிக்க வலுவுடையதாக அமையவேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை என்றும் கூறப்படுகிறது. இத்தகைய ஒரு மாகாண அரசையே தற்போது ஆட்சியிலுள்ள மாகாண அரசினரும் கோருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசின் அணுகுமுறை மிகுந்த அவதானமுடையதாக அமைய வேண்டும். வட—கிழக்குப் பகுதியில் இரத்தக்களரி ஏற்படாமல் இதைத் தீர்த்து வைக்க வேண்டுமாயின், இலங்கை அரசும் இந்திய அரசும் இது பற்றி இணக்கமான முறையில் பேசித்தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும்.

## இலங்கை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

விமர்சனம் கூறுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இருக்கும் உள்கட்சி முரண்பாடுகளும் வெளிச்சக்தி எதிர்ப்புகளுடசேர்ந்து அவரை பதவி கவிழ்க்கலாம் என்றும், இப்படி அவரது ஆட்சி கவிழும் படசத்தில், முன்னைய ஜனாதிபதிஜே. ஆர். தலைமையில் ஓர் இடைக்காலக் காபந்து அரசாங்கம் தோற்றுவிக்கப்படலாம் என்றும் மேலும் இச்செய்தி தெரிவித்துள்ளது.

இத்தகைய ஆட்சி கவிழ்ப்புக்கு உடந்தையாக ராணுவ மட்டத்தில் செல்வாக்குடைய சில அமைச்சர்கள் இயங்குவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வித உள்கட்சி மோதல்களுக்கு முக்கிய காரணம் தற்போதைய ஜனாதிபதிக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள வர்க்க வேறுபாடே என்றும் கருதப் படுகிறது.

## பிச்சை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இது இம்மாதத்திலேயே கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்படி தடைக்குள்ளாக்கப்படும் பிச்சைக்காரர் சகலருக்கும் புனர் வாழ்வு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 30-6-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.